Registered No. M. 2330.

" SIDDHANTHAM "
Vol. 3—No. 11.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "

மலர் ௩	பிரமோதூத ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1930 ௵ நவம்பர்௴	இதழ் ௧௧

உள்ளுறை பக்கம்

கார்த்திகை தீபம் உ௩௩
உண்மைச் சமய உணர்வு உ௩எ
வெண்ணீறு உ௩௯
பொது நிலைக்கழக விழா உ௪உ
திலகவதியார் சரிதத்தின் அரும்பொருள்கள் ... உ௪எ

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,
உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

"சித்தாந்தம்" வி. பி. அறிக்கை

1. "சித்தாந்தம்" மூன்றாவது மலர் அடுத்த மாதத்திய பன்னிரண்டாவது இதழோடு முடிவடையும். ஜனவரி மீ முதல் நான்காவது மலர் தொடங்கும். நான்காவது மலரின் கையொப்பத் தொகையை ஒவ்வொருவரும் 1930ஆம் டிசம்பர் மீ 31உக்குள் மகாசமாஜ காரியதரிசிக்குக் கிடைக்கும்படி மணியார்டர் செய்துவிட வேண்டும். ஒரே ஊரிலிருக்கும் பல சந்தாதாரர்கள் சந்தாத் தொகையைச் சேர்த்து அனுப்பும்போது மணியார்டர் கவுப்பனிலாவது தனியே கார்டு மூலமாவது தங்கள் பெயர், விலாசம், சந்தா எண் முதலிய விவரங்களைத் தெளிவாக எழுதித் தெரிவிக்கவேண்டும்.

2. 1930ஆம் டிசம்பர் மீ 31உக்குள் நான்காவது மலரின் கையொப்பத் தொகையைச் செலுத்தாத சந்தாதாரர்கட்கு நான்காவது மலரின் முதல் இதழ் வி. பி. மூலம் அனுப்பப்படும். அவ்வாறு வி. பி. அனுப்பப்பெற்றுக் கொள்வதினால் ஒவ்வொரு சந்தாதாரருக்கும் வி. பி ரிஜிஸ்தர் தபாற்கூலி வீண் நஷ்டமாகும்.

3. சில நண்பர்கள் வி. பி. வருங்காலத்தில் பெற்றுக்கொள்ளாது மற்றொருமுறை வரும்படியாகத் தபாற்காரனுக்கு அறிவித்து விடுகிறார்கள். பிறகு தபாற்காரன் வி. பி. யை சில நாள் வைத்திருந்து "not claimed" (வேண்டப் படவில்லை) என்று குறித்து சமாஜத்துக்குத் திருப்பி விடுகிறான். இதனால் சமாஜத்துக்கு வி. பி. செலவு நஷ்டமாகிறது. இவ்வாறு வி. பி. திருப்பப்பட்ட சில நாட்களுள் அந்த வி. பி.யைப் பெறவேண்டிய சந்தாதாரர் தாம் ஏதோ காரணம் சொல்லி மீண்டும் பத்திரிகையை அனுப்பும்படி கடிதம் எழுதுவது வழக்கமாகயிருக்கிறது. சென்ற மூன்று ஆண்டிலும் சமாஜம் இத்தகைய அனுபவங்கள் பல பெற்றுள்ளது.

4. ஆகையால் அன்பர்கள் தயைசெய்து சமாஜத்துக்கு வீண் கஷ்டமும் நஷ்டமும் தராமல் அடுத்த மலருக்குரிய கையொப்பத்தை முன்னதாகவே அனுப்பி வைப்பது பேருபகாரமாகும் என்று நமது சந்தா நேயர்களுக்கு அறிவிக்கிறோம்.

5. பணம் அனுப்பும் ஒவ்வொருவரும் தமது முழுப்பெயர், விலாசம், சந்தா எண் ஆகிய விவரங்களைத் தெரிவித்தல் அவசியமாகும்.

6. இவ்வாண்டு பத்திரிகையைத் தருவிக்கும் ஒவ்வொரு நேயரும் புதிதாகப் பல சந்தாதாரரைச் சேர்த்துத் தர வேண்டுகிறோம். அல்லது ஒரு சந்தாதாரரையேனும் அடுத்த ஆண்டுக்குச் சேர்த்து அவர் கையொப்பத்தையும் சந்தாத் தொகையையும் 1930ஆம் டிசம்பர் மீ 31உக்குள் சமாஜக் காரியதரிசிக்கு அனுப்பி உபகரிக்க விரும்புகிறோம்.

7. குறித்தபடி மணியார்டர் செய்து அடுத்த ஆண்டுக்குச் சமாஜ அங்கம் வகித்துப் பத்திரிகை பெற விரும்பாமலோ, அல்லது முடியாமலோ இருப்போர், தயை கூர்ந்து அரையணா கார்டு மூலம் நமக்கு அறிவித்து விட்டால் சமாஜத்துக்குப் பொருள் நஷ்டமும் கஷ்டமும் விளையா. பத்திரிகை பெற விரும்பாதாரும், இயலாதாரும் தயை செய்து தெரிவித்தலாகிய உபகாரத்தையேனுஞ் செய்வார்களாக.

8. ஒவ்வொரு சந்தாதாரரும் தமது திருத்தமான தபால் விலாசத்தைச் செவ்வையாக எழுதி உடனே அனுப்ப விரும்புகிறேன்.

இங்ஙனம்:

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை, 10—11—1930.

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார்,
காரியதரிசி.
சைவசித்தாந்த மகாசமாஜம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "

மலர் ௩	பிரமோதூத ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1930 ௵ நவம்பர் ௴	இதழ் ௧௧

கார்த்திகை தீபம்

[பத்திராசிரியர்]

சைவம் தழைத்தோங்கும் நந்தமிழ் நாட்டில் எல்லா விழாக்களைவிட மிகுதியான மக்கள் திரளும் முழுக்கும் விரதமும் உவகையும் கொண்டு மிளிர்வது திருவண்ணாமலையில் நடைபெறும் கார்த்திகை தீப விழாவேயாம். தென்னிந்திய இருப்புப்பாதை கம்பெனியாரின் கணக்குப்படி இந்த விழாவுக்குக் கூடுவதுபோல அவ்வளவு மிகுதியாக கும்பகோணம் மஹாமஹம் நீங்கலாக வேறு எந்த விழாவுக்கும் மக்கள் திரண்டு கூடுவதில்லை. மஹா மஹம் என்ற விழா பன்னிரு ஆண்டுக்கொரு முறை நிகழ்வதால் சாதாரண கணக்கில் அதைச் சேர்ப்பதில்லை.

கார்த்திகை தீபம் என்ற விழா கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நக்ஷத்திரத்தன்று திருவண்ணாமலையிலும் உள்நாட்டுச் சிவாலயங்களிலும் பௌர்ணமையில் கடற்கரை யோரமாயுள்ள சிவாலயங்களிலும் ஆகம விதிப்படி கொண்டாடப்படும். இவ்வாண்டில் முறையே கார்த்திகை௴ ௧௯, ௨0-ம் தேதிகளில் (1930௵ டிசம்பர்௴ 4, 5௳) இவ்விழா திருவண்ணாமலை முதலிய உள் நாட்டுத் தலங்களிலும் திருமயிலாப்பூர் முதலிய கடற்கரைத் தலங்களிலும் கொண்டாடப்படும்.

பண்டைக் காலத்தில் திருமாலும் பிரமனும் "நான் பெரியோன் நீ சிறியோன்" என்று சண்டை யிட்டதாகவும் அவர்கள் எதிரில் சிவபெருமான் சோதி வடிவாகத் தோன்றி " இவ்வனற் பிழம்பின் முடியையும் அடியையும் கண்டு பிடித்தால் உங்கள் பிணக்குத் தீரும்" என்று கூறியதாகவும் பிரமன்

அன்னப்பறவையாகவும், திருமால் பன்றியாகவும் முறையே முடியையும் அடியையும் துருவிக்காணச் சென்றதாகவும், முடியைக் காணமுடியாத பிரமன் தாழம்பூவைப் பொய் சாக்ஷி சொல்ல ஏற்படுத்தி முடியைக் கண்டதாகச் சாதித்ததாவும், திருமால் அடியைக் காணவில்லை யென்று ஒப்புக் கொண்டதாகவும், உடனே சிவபெருமான் அவ்வனற் பிழம்பி விருந்து தோன்றி பொய் சொன்ன பிரமனையும் தாழம் பூவையும தண்டித்து திருமாலுக்கு அருள் புரிந்ததாகவும், இவ்வனற் பிழம்பே திருவண்ணுமலையாக அமர்ந்து விட்டதாகவும் புராணம் கூறுகின்றது. இப்புராணக் கதையைத் தழுவி தேவார திருவாசகங்களில் பற்பல விடங்களில் மலரயனும் திருமாலும் காணுதபிரான் என்று சிவபெருமானுக்குத் தோத்திரம் காணப்படுகின்றது. எண்ணிறந்த வேறு புராணங்களிலும் தோத்திரப் பாக்களிலும் இக்கதை நுவலப்படுகின்றது.

இக்கதை சிவபெருமானுடைய உயர்வு, எங்கும் நிறைந்துள்ள தன்மை முதலியவற்றையும், பிரமன் திருமால் ஆகிய இருவரின் தாழ்வு, எங்கு நிறைந்திலாமை முதலியவற்றையும் உணர்த்துகிறது. எல்லாச் சமயங்களும் ஒருங்கு கூடி எல்லாச் சமயங்களிலும் பொதுவான பெரும்பகுதி ஒன்றும் அவ்வச்சமயங்கள் வழங்கப்படும் நாட்டின் நிலைமைக்கேற்ற சிறப்புப் பகுதிகள் பலவும் இருக்கின்றன வென்றும், உண்மையை ஆராய்ந்தால் சமயங்களுக்குள் பிணக்கு தேவையே யில்லை யென்றும் ஆன்றோர் முடிபு கூறும் இவ்விருபதாம் நூற்றுண்டில் சைவத்துக்கும் வைணவத்துக்கும் பிணக்கு விளைவிக்கக்கூடிய இக்கதையை, சமரச நோக்கமுடையார் எவ்வாறு கொள்ள வேண்டும் என்பதை அறிவது அவசியமாகும்.

மிகப்பழைய சங்க நூல்களிற் கிடைக்கும் குறிப்புக்களில் சைவத்துக்கும் வைணவத்துக்கும் பிணக்கு இருந்ததாகத் தெரியவில்லை. பரிபாடல் என்ற பழைய சங்க நூலிலுள்ள எழுபது பாடல்களில் செவ்வேளுக்கு அ-ம் திருமாலுக்கு கூ-ம் சிதைவின்றி முழுமையும் ஏடுகள் மூலம் கிடைத்துள்ளன. அவற்றுள் திருமால் பாடல்களில் திருமாலை முழுமுதற் கடவுளாகவே கொண்டு தோத்திரம் நிகழ்ந்திருக்கிறது. உதாரணமாக,

“ தீவளி விசும்பு நிலனீ ரைந்து
ஞாயிறுந் திங்களு மறனுமை வருந்
திதியின் சிறாரும் விதியின் மக்களு
மாசிலெண் மரும் பதினொரு கபிலருந்
தாமா விருவருந் தருமனு மடங்கலு
மூவே ழுலகமு முலகினுண் மன்பது
மாயோய் நின்வயிற் பரந்தவை யுரைத்தே”

என்று ஒரு பரிபாடல் கூறுகின்றது. இஃதேபோல் வேறு பல பரிபாடல் பதிகங்களில் பல குறிப்புக்கள் உள்ளன.

இத்தகைய பழைய சான்றுகளை சிவஞான சித்தியார் இரண்டாம் சூத்திரம் எச, எ௩-வது செய்யுட்களோடு வைத்து ஒப்பிடுவது நோக்கத்தக்கது.

“ சிவஞ்சத்தி நாதம்விந்து
சதாசிவன் திகழுமீசன்
உவந்தருள் உருத்திரன்றான்
மால்அயன் ஒன்றிஞென்றுப்
பவந்தரு மருவ நாலிங்
குருவநா லுபயமொன்று
நவந்தருபேதம் ஏகநாதனே
நடிப்பன் என்பர்.”

“ சத்தியாய் ....
......உமைதிரு வாணியாகி

....

எத்திறநின் றானீசன் அத்திறமவளுநிற்பள்”

இறைவனை ஒளி வடிவாக வணங்குவது எல்லாச் சமயங்களுக்கும் உடன்பாடாக இருக்கிறது. பிரமஞான சங்கத்தார் புதியதாக அமைத்துள்ள கோயிலில்கூட ஒளியை வைத்தே வணங்குகின்றனர். ஒளியானது அறிவு, அன்பு, ஆற்றல், வியாபகம் முதலிய பலவற்றிற்கு அறிகுறியாக இருக்கின்றது. இலிங்கமூர்த்தங்கூட ஒளி வடிவம் என்பது ஆன்றோர் கொள்கை. ஆகவே அடிமுடியிலாத ஒளிப்பிழம்பு அளவற்ற அறிவு, அன்பு, ஆற்றல், வியாபகம் முதலியவற்றிற்கு அறிகுறியாக இருக்கிறது. அயனும் அரியும் தங்களுக்குள் உயர்வு தாழ்வைப்பற்றி வாதித்தனர் என்பதை முழுமுதற் கடவுளின் ஒன்பது அவசரங்களுள் எது சிறந்தது என்பதைப் பற்றி வாதித்தனர் என்றே சித்தியார் மேற்கோளின்படி ஊகிக்கவேண்டும். அவ்வாறு வாதித்தவர்கள் உண்மை காணமுடியவில்லை என்றும், ஒன்பது அவசரங்கட்கும் உறைவிடமாகிய ஒளிப்பிழம்பைக்கண்டனரென்றும் கொள்ளவேண்டும். அவ்வொளிப் பிழம்பு ஒன்பது அவசரங்களும் கூடிய முழுமுதற் கடவுளின் உருவமானபடியால் தனித்தனி அவசரமூர்த்தங்களுக்கு மேம்பட்டதாகத் தோன்றிற்று என்பதே முடிந்த முடிபாயிற்று என்று கதை முடிவதைக்காணலாம். இவ்வரிய உண்மையை இக்கதை விளக்குகின்றது. இது ஒருவகை ஆராய்ச்சி.

எர்னெஸ்ட் வுட் என்ற ஆங்கில ஆசிரியர் ஒருவர் மற்றொரு வகையாக ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். பிரமன், திருமால், சிவன் ஆகிய மூவரையும் சத்து, சித்து, ஆனந்தம் என்று கொண்டு சத்திலிருந்து சித்து பிறந்ததா அல்லது சித்திலிருந்து சத்து பிறந்ததா என்ற வாதமே பிரமனுக்கும் திருமாலுக்கும் நிகழ்ந்த சண்டையாகப் புராணம் கூறுகின்றது என்றும், அவ்வாறு சண்டை நிகழும்வரை ஆநந்தம் கைகூடாது என்ற உண்மைதான் புராணத்தில் அயனும் அரியும் சிவனைக் காணமுடியவில்லையென்று கூறப்பட்டிருக்கிறது என்றும் இவ்வாசிரியர் முடிபு கூறுகின்றனர். இது ஒருவகை ஆராய்ச்சி.

“சைவ சமயமே சமயம்” என்று வைரத்தோடு நிலைநாட்டும் அதிரசஞானிகள் இத்தகைய ஆராய்ச்சிகளைக் கண்டு சினங் கொள்வர் என்பது வெளிப்படை. அன்னோர் பிரமன், விண்டு முதலியோரை உயிர் வருக்கத்தில் வைத்தெண்ணி திருமால் வணக்கத்தை அடியார் வணக்கமாகவே கொள்வர். ஆனால் அவர்கள் கொள்கை சமயப் பிணக்கைப் பெருகச் செய்து சமரசத்தை வேரோடு அறுக்கும் தகையது என்பதை அவர்களே மறுக்க இயலாது.

திருவண்ணாமலையில் நடைபெறும் உத்ஸவத்தில் திருமாலும் பிரமனும் அடிமுடி தேடியும் காணாத கதை ஒன்றும் காட்டப்படுவதில்லை. இதை ஒவ்வொருவரும் நன்கு உணர வேண்டும். சாதாரணமாக ஒவ்வொரு தலத்திலும் முக்கியமாகவுள்ள ஐதீகங்களைத் திருவிழாவில் ஒருநாளில்நடத்திக்காட்டுவது வழக்கம். ஆனால் இந்த ஐதீகம் கார்த்திகை தீப உத்ஸவத்தில் காட்டப்படுவதில்லை. அவ்வுத்ஸவத் தன்று மாலை பஞ்சமூர்த்திகளும் புறப்பட்டு உருத்திராக்க மண்டபத்தில் சிவ சந்

நிதிக் கெதிரில் வீற்றிருக்கின்றனர். உடனே அர்த்தநாரீசுவரர் பரணி தீபக் கலசங்களோடு வருகிறார். அவர் தோன்றியவுடன் மலையின் உச்சியில் தீபம் ஏற்றப்படுகிறது. அதாவது பரணி தீப பூஜை (அதாவது பஞ்சப் பிரஹ்ம சோடசோபசார பூஜை) செய்யப்பெற்ற பரணி தீபக் கலசங்களைந்தும் ஒளி மயமாகி மலைமேல் தீபமாக (அதாவது ஒளியே மலையாக) மாறி விடுகின்றன வென்றும் அவ்வாறு மாறிய ஒளி வடிவமே அர்த்தநாரீசுவரர் என்றும் மக்களறிவதற்காகவே இந்த முறையில் உத்ஸவம் நடத்தப் படுகின்றது என்று ஊகிக்கலாம். இந்த உத்ஸவ முறை சமரச உணர்ச்சிக்கு ஒரு சிறிதும் முரண்படாதது நோக்கத்தக்கது. சிறப்பாக இவ்வுத்ஸவத்தின் மூலம் கடவுளை ஒளிவடிவாக வணங்கும் உயரிய முறை போதிக்கப் படுகிறது.

அறிவு, அன்பு, ஆற்றல் முதலியவற்றின் அறிகுறியாகக் கடவுளை ஒளி வடிவமாக வணங்குவது சிறநதது என்றும், அவ்வறிவு முதலியன அளவு கடந்து கடவுளிடததில் நிலைபெற்றிருத்தலால் அளவு கடந்த ஒளிப்பிழமபாகக் கடவுளை வழிபடுதல் சிறநததென்றும், அவ்வாறு திருவண்ணாமலையிற் றோன்றிய திருநாளையும் அதை யொட்டிய விழாவையும் சமய விரோதமின்றி எல்லாச் சமயத்தவரும் அநுட்டிக்கலா மென்றும, அவ்வொளி வடிவத்தை இன்னார் பார்க்கலாம் இன்னார் பார்க்கக்கூடாது, அங்கிருநது பார்ககலாம் இங்கிருநது பார்க்கக் கூடாது என்ற கட்டுப்பாடுகளின்றி அனைவரும் எங்கணுமிருந்து காணக் கூடிய வகையில் "மலை விளக்கு" என்ற பழமொழிக் கேற்ப மலை விளக்காகவே வணங்கும் முறை அறிவுக்கும் இந்நூற்றாண்டின் முதிர்ச்சிக்கும் மிகப் பொருத்தமானதே யென்றும் விளங்கா நிற்கும்.

நாததிகம் பகிரங்கமாக போதிக்கப் படும் இந்நாளில் நமது புராணக் கதைகளைச் செவ்வனே ஆராய்நது அவற்றினுட் கருத்துக்களை விரிவாக எடுத்து விளக்குவதே அறிஞர் செய்தற்குரிய பெரும் பணியாகும். அவ்வாறு விளக்கும்போது சமயப் பிணக்கு சாதிப் பிணக்கு முதலியவைகளை ஒழித்து உண்மைச் சமரச முறையைக் கடைப் பிடிப்பதே அறிவுடைமை யாகும்.

எனவே, இக்கட்டுரையைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் கார்த்திகை தீபத்தன்று முழுக்கு, விரதம், பூசை, பாராயணம், கோயில் வழிபாடு, விழாக் காணல் முதலியன செய்வதோடு அமையாது மேறகூறிய புராணக கதையின் உட்கருத்தைத் தம்மாலியன்ற வரை ஆராய்ந்து மக்கள் சமயப் பிணக்கின்றி இக்கதையை ஒப்புக் கொள்ளும் வழியை சிறு கட்டுரையாக வரைநது அறிவுத தொண்டு புரியுமாறு அருள் செய்ய எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

ஓதிமா மலர்கள் தூவி உமையவன் பங்கா மிக்க
சோதியே துளங்கு மெண்தோள் சுடர்மழுப் படையி னானே
ஆதியே அமரர் கோவே அணியணா மலையு ளானே
நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே—அப்பர்.

உண்மைச் சமய உணர்வு

[காழி - சிவ. கண்ணுசாமி, B. A.]

காலமிருந்தவா றென்னே! மக்கள் எதுவொன்றிலும் எளிதில் நம்பிக்கை வைப்பதில்லை. எனினும் வேண்டியார் வேண்டியாங்கு வரமீயும் பான்மையர் வேணிப்பிறை முடித்தார் என்ற மறைமொழி கண்டு கடவுட் கோட்பாடு ஒரு தலையாய் இல்லையென ஒழியாது நின்று நிலவுகிறது. இம் மறை மொழியால் உள்ளியதெல்லாம் கிட்டும் பான்மைய என்பதும், கண்கூடாகக் காணக்கூடாத பொருள்கள் பல உறுதியாய் உள என்பதும் நம்பப்படுகிறது. இஃதென்ன முரண்பாடு! உண்மைச் சமய வுணர்ச்சியோ உள்ளத்தின்கண் தோன்றி நிலைப்பதொன்று. அவ்வாறு அகத்தின்கண் நிகழும் ஒரு தோற்றத்திற்கும், கண்கூடாக உள்ளியதைக் கைம்மேற் பெறுதலாய ஒரு புற நிகழ்ச்சிக்கும் எத்தகைய ஒற்றுமையேனும் இருத்தல் கூடுமோ? கூடாதாகவே, உண்மைச் சமய வுணர்ச்சி யென்பது வேண்டிய வற்றைப் பெறுவதனாற் கடவுள் உண்டென்று கருதும் உணர்ச்சியாகாது; கண்ணாற்காணக் கூடாத தொன்றாயினும், உண்டென்று கொள்ளும் உறுதிக் கோட்பாடும் ஆகாது. கோட்பாடென்பதும், உணர்ச்சியென்பதும் வெவ்வேறு பொருளன வாகலின், உறும் என்னும் நம்பிக்கையுமன்று, உண்டென்னும் உறுதியுமன்றாயின், உண்மைச் சமய வுணர்ச்சிதான் யாதோவெனின், அஃது தனிப்பட்டதோர் உளப்பான்மையேயாகும். உலகின்கட் டோன்றியுள்ள பல பொருள்களிடை மகனெனப்பட்ட ஒருவன் எந்நிலையிலிருக்கிறான் என்பதை யறிந்துகோடலே அவ்வுளப்பான்மை. அறிந்த அவ்வறிவுக்கேற்பச் சிலபல செயல்களை யவன் புரியக் கடமைப்பட்டவனாகின்றான். இவ்வாறு ஒருவன் செயல்புரிவது, காணப்படும் பொருள்களாகிய உலகப் பொருள்களைப் போன்றே, காணப்படாத ஒரு பொருளும் உண்டென்று அவன் நம்புவதனாலன்று; மற்று, தான் அடைய விரும்பும் ஒன்றை அடைவோமென்னும் அவாவினாலுமன்று. மற்றெதனாலோவெனின், உலகின் கண்ணுள்ள பல பிறப்புக்களிடைத் தான் மக்கட் பிறப்பிற் பிறந்ததனால் எந்நிலையை யடைந்துளா னென்பதை யறிந்து அதற்கேற்பத் தன் செயல்களை வழிப்படுத்தி வருவதனாலேயே. வேளாளனொருவன் உழுது பயிரிடுந் தொழிலை மேற்கோடலும், மாலுமி யொருவன் படகோட்டிப் பொருளீட்டக் கருதுவதும், ஏதோ காணப்படாத ஓரிடத்தில் இறைவனிருந்து உய்யும் வழி காட்டுகிறான் என நம்புவதனாலோ அன்றி, உழுவதனாலும், ஓட்டுவதனாலும் பயன் எய்தல் உறுதியெனக் கருதியோ அன்று; அதுவே தத்தம் தொழின் முறையென வறிந்து மேற்கோடலினாலேயே யாம். ஒருவன் கூலியாளனாகவோ, எழுத்துக்காரனாகவோ, அன்றி வணிகனாகவோ, தொழில் புரிய முற்படின் அதற்கேற்றபடி உழைக்க வேண்டுமென்பதுணர்ந்து உரிய வேலையைச் செய்கிறான். எந்நாட்டில் எப்பெருங் குடியிற் பிறந்துளோமென்பதுணர்ந்த ஒருவன், அக்குடிப்

பிறப்பிற்குரிய கோட்பாட்டினின்றும் வழுவாது நடக்க முற்படுதலும் முறையே. அது போன்றே "எங்கள் சமயமே இறைவன் கண்டது" என நம்பியானொருவன் அச்சமயப் பயனுகர வேண்டின் அதன் கட்டளைகளினின்றும் வழுவாது நடத்தலுமியற்கை. செய் கருமத்திற் கேற்பப் பிறப்பிற் சிறப் பெய்துவது உண்மை யென நம்பிய வொருவன் அதற்கேற்ப நடந்து கொள்ள முயல்வானன்றோ ? அதுவே போல் 'உலகமே மாயை, நன்மை தீமை என நாங் கொள்வதெல்லாம் கானற் றேரும் முயற் கொம்புமே யாகும்' என நம்பிய ஒருவன் அதனை யொட்டியே பணியாற்றுவானெனக் கூறவும் வேண்டுமோ ? எனவே இம் முத்திறத்தினரின் நடத்தையும் வெவ்வேறு விதமா யிருக்கு மென்பது எளிதிற் பெறப்படும். ஆயினும் ஒவ்வொருவனும் தான்றன் பெற்ற சமய வுணர்ச்சி யேதுவாகத் தன் நிலையின்னதென முதற்கண் குறித்துக் கொண்டானென்பது உய்த்துணரற்பாற்று.

இனி, சமய வுணர்ச்சிக்கும், சமயம் என்பதற்கும் உள்ள வேறு பாடு யாதோ வென்னிற் கூறுதும். சமயம் என்பது புறத்தே யாவரானுங் கண்டறியப்படுவது ; சமயவுணர்ச்சியோ, ஒவ்வொருவரானும் அவரவர், அகத்தே நிகழ உய்த்துணரப் படுவது. சமய வுணர்ச்சி என்பது உலகத்திற்கும் அதனிடைப் பிறந்த ஒரு மகனொருவனுக்கும் உள்ள தொடர்பு இன்னதென்பதை யுய்த்துணர்ந்து அதன் வழி அவன் தொழில் புரிவதே யாகும். எனவே உண்மைச் சமய வுணர்ச்சி பகுத்தறிவுடன் முரண்படுவதன்று ; பொது அறிவுடன் இகலுவது மன்று. ஆனால் அதன் வழியாய்ந்தாலன்றி அறிவற்றதும், முரண்பாடுடையதாகவுந் தோன்று மொவ்வொன்றையும் எளிதில் விளக்குங் கருவியா யமைவது உண்மைச் சமயவுணர்ச்சியே யாகும்.

இனி, பதி வேறு பசு வேறு என்பதில்லை. பதியும் பசுவு மொன்றே என்ற கொள்கையுடையா னொருவன் தக்க ஏதுவும் தீர்ந்த ஆலோசனையுமின்றி அம்முடிவுக்கு வந்தானென்று கொள்ளல் கூடாது; அவனால் அதற்கு முன் அறிய முடியாதிருந்த பல வாழ்க்கைச் சிக்கல்களை யறுத்து அவ்வுணர்ச்சி தானும் அவனுக்குத் தெளிவைக் கொடுத்ததாகலின்.

எழுபிறப்பும் பிறந்தாலன்றி ஒருயிர் வீடுபேறெய்தமுடியாது ; அப்பிறப்பு தானும் செய் கருமத்தளவான் அமைவது என்ற கொள்கையுடையானொருவனுக்கும் அஃதொக்கும். மற்றும் அதுபோன்றே ' ' அவனவளதுவெனு மவை மூவினைமையின் ' ' என்ற சித்தாந்தக் கோட்பாடுடையார்க்கும்.

இனி, இக கொள்கைகளும் மற்றிவை போன்றனவும் கண்கூடாக மெய்ப்பித்துக் காட்டுந் திறத்தன வல்லவென்பது கருதி அவைகள் அறிவிற் கொவ்வாதனவென்று கொள்ள வேண்டுவதில்லை. அக் கொள்கைகள் தோன்றுவதன் முன்னர் பூட்டகமாயிருந்த பல பகுதிகள் அவற்றினுதவியால் அறிந்து தெளியப்பட்டிருக்கின்றன. அதனினுஞ் சிறப்பாக, பல திறப்பட்ட இக்கொள்கைகள் உயிருக்கும், உலகுக்கும் உள்ள தொடர்பை அஃததன் திறத்திற்கேற்ப விளக்கியதன்றி ஏற்ற வகையில் மக்களது

செயல்களையும் மாற்றி யமைப்பன வாயின.

பகுத்தறிவிற்கு முரண்படாததாய உண்மைச்சமயவுணர்ச்சி உலகிடை மகனெனப்பட்ட ஒவ்வொருவனுடைய நிலையையு முணர்த்தி அவன் செயல்களை யதற்கேற்ப ஆற்றுப் படுத்துந் திறமை யுடையதெனக் கண்டோம். அற்றாயின் விளக்கத்தை யளியாமல் கலக்கத்தை மிகுப்பதாய ஒரு சமயம் பொருளற்ற பல கருத்துக்களைப் பரப்பும் எனின், அதனைச் சமயமெனல் கூடுமோ? அதனைப் பின்பற்றிய உணர்ச்சியும் உண்மைச் சமய உணர்ச்சியாமோ? சமயத்தின் திரிபுணர்ச்சியே யது. உண்மைச் சமயவுணர்ச்சியின் உயிர்ப் பண்பை யிழந்த இத் திரிபுணர்ச்சி மகன் மாட்டுப் பணி கோடும் ஆற்றலை யிழந்து அவன் கைக் கருவியாக மாறி அவனுக்குப் பணியாற்றத் தொடங்குகிறது.

திரிபுணர்ச்சியின் தலையாய தீமை யென்னவெனில், மகனது வழிபாட்டிற்கும் அவனளிக்குங் கையுறைக்கும் ஏற்றவாறு இறைவன் அவனுக்கு வேண்டியதை யளித்து அம்மகனது பணியாளாக இருப்பானென்று கற்பிப்பதேயாகும். உண்மைச் சமய வுணர்ச்சியோ வெனின், இறைவனே ஆண்டான், அவன் முன் பல்லுயிர்களும் அடிமைகளே யாவர்; ஆண்டவனது ஒப்பற்ற கருத்துக்களை முடித்துவைக்கும் பணியாளர்களாக உயிர்கள் உலகிடைப் படைப்பிக்கப்பட்டிருக்கின்றன, என்ற மாசற்ற உயர்ந்த உண்மைகளைக் கற்பிக்கின்றது.

இத்தகையதோர் சமய வுணர்ச்சி தான் இக்காலை வலியிழந்து உருமாறி வருகிறது; சமயவுணர்ச்சி யொன்றுண்டென்னும் உணர்வேயற்ற பலர் "என்பு தோல் போர்த்த உடம்பென"த் திரி தருகின்றனர். மந்திரமும், மறைமொழியுமே சமயத்தின் சாரம் எனக்கொண்டு, இறைவனை வழுத்தின் இம்மையே எய்துஞ் சோறுங் கூறையும் என இவர் நம்பியுள்ளார் போலும்! என்னே! இவர் தம் சமய வுணர்ச்சி யிருந்தவாறு!!!

> வாழ்த்துவதும் வானவர்கள்
> தாம்வாழ்வான் மனநின்பால்
> தாழ்த்துவதுந் தாமுயர்ந்து
> தம்மையெல்லாந் தொழவேண்டிச்
> சூழ்த்தமது கருமாலுக்
> தாரோயை நாயடியேன்
> பாழ்த்தபிறப் பறுத்திடுவான்
> யானுமுன்னைப் பரவுவனே.

என்ற உண்மைச் சமயவுணர்ச்சி ததும்பும் ஒரு தனிச் செய்யுளின் உண்மைப் பொருளை இவர்கள் அறிவது எந்நாளோ?

வெண்ணீறு

[சிதம்பரம் - சபாபதி சுவாமிகள்]

சைவசமயிகள் சரீரத்திலே ஆவசியகமாகத் தரிக்கற்பாலனவாகிய சிவசின்னங்களிற் சிறந்தது திருநீறு. திருநீறு-கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூவகைப்படும் (இம்மூன்று மல்லாதது அகற்ப மெனப்படும்.)

இவற்றுள் கற்பமாவது கன்று பிறந்து பத்துநாட் சூதகமுடைய பசுவும், கன்று பிரசவியாத கிடாரியும், வியாதியுடைய பசுவும், தன்கன்று சாவப்பெற்ற பசுவுமாகிய இவற்றின் கோமயம் குற்றமுள்ளனவாதலாலும்

கிழப்பசுவும், மலட்டுப்பசுவும், தூர்க்கந்தம் பொருந்திய மலத்தைத் தின்னும் பசுவும்சுத்தமுடையனவல்லவாதலாலும், இவைகளல்லாத மற்றைப்பசுக்களினது கோமயத்தையும் பங்குனி மாசத்திலே பசான மென்னும் நெல்லினது தாளை மேய்தலால் அப்போது அட்டமி, சதுர்த்தசி, அமாவாசி, பௌர்ணிமை என்கிற நாட்களில் பசுக்களையடைந்து, கோசாவித்திரி முதலிய தோத்திரங்களைச் செய்து, பூமியிலே விடுமுன், சத்யோ சாதமந்திரத்தினாலே தாமரையிலையிலேற்று, மேல் வழும்பு நீக்கி அதன் நடுப்பாகத்தைக் கொள்க. கோமயங் கொள்ளுதல் சாந்திகம், பௌட்டிகம், காமதம் என மூவகைப்படும். கோமயம் இடும்போது பசுவின்பிற்றட்டிலே கைவைத்து ஏற்பது சாந்திகம்-பூமியிலே விழுமுன் தாமரையிலையிலேற்பது பௌட்டிகம்; பூமியில் விழுந்த பின் எடுப்பது காமதம். இவ்வாறு விதிப்படி எடுக்கப் பட்ட கோமயத்திலே வாமமந்திரத்தினாலே பஞ்சகௌவியம் வார்த்து, அகோர மந்திரத்தினாலே பிசைந்து, அவ்வகோர மந்திரத்தினாலே உருண்டை செய்து, பதரைப் பரப்பி அதன் மேல் தற்புருட மந்திரத்தினாலே வைத்து சிவாக்கினியைக் கற்பித்து அதனாலே தகனஞ்செய்ய வேண்டும். நித்தியாக்கினி செய்பவர்களாயின் அவ்வக்கினியிற்றானே விளைவிக்கலாம். அன்றைக்கே எடுத்து, அன்றைக்கே உருண்டை செய்து, அன்றைக்கே சிவாக்கினியிற்றகனம் பண்ணுதலும் அன்றி உலரவைத்துத்தகனம் பண்ணுதலும் ஆம். அவ்விபூதி நன்றாக விளைந்ததை யறிந்து ஆராய்ந்து அதிலே கருகல் முதலாய குற்றங்களை நீக்கி நல்லதை ஈசான மந்திரத்தை யுச்சரித்தெடுத்து கருநிற விபூதி வியாதியை யுண்டாக்குவதாலும், செந்நிற விபூதி கீர்த்தியைப் போக்குவதாலும், புகைநிற விபூதி ஆயுளைக் குறைப்பதாலும், பொன்னிற விபூதி சம்பத்தைக் கெடுத்தலாலும், அவைகளை வெறுப்புடனே தள்ளி, வெண்ணிற விபூதியானது அளவில்லாப் புண்ணியத்தை விளைத்தலால், அவ்விபூதியைப் புது வஸ்திரத்தினாலே வடித்து, நவபாண்டத்திலே எடுத்துவைத்து, அந்தப் பாண்டத்தினை விபூதி காயத்திரி மந்திரத்தை யுச்சரித்து சுத்த பூமியிலே கொண்டுபோய் வைத்து, மல்லிகை முல்லை பாதிரி சிறு சண்பகம் முதலிய சுகந்த புட்பங்களை எடுத்துச் சத்தியோசாத மந்திரத்தினாலே அதனுள்ளே போட்டு, புது வஸ்திரத்தினாலே அதன் வாயைக் கட்டி, இதுவே நமது திரவியமென்று கருதி, நாடோறும் சிவாகமத்திலே விதித்தபடி சிவ மந்திரத்தினாலே எடுத்துத் தரிக்க. (இது கற்பமாகும்)

இனி அநுகற்பமாவது, சித்திரை மாசத்திலே, பசுமந்தை நின்ற மந்தையிலே போய், உலர்ந்து கிடந்த கோமயங்களை யெடுத்து உரலிலே போட்டுத் தூளாக்கி, அதிலே கோசலத்தை வாமதேவ மந்திரத்தினாலே வார்த்து, அகோர மந்திரத்தினாலே அள்ளிப் பிசைந்து உருண்டை செய்து, பதரை விரித்து அதன் மேலே தற்புருட மந்திரத்தினாலே வைத்துச் சிவாக்கினியினாலே தகனஞ் செய்து, ஈசான மந்திரத்தினாலே எடுத்துக் கொள்க. (இது அநுகற்பமாகும்)

இனி உபகற்பமாவது, வனத்தின் கண்ணே மரத்தோடு மரம் இணைந்து

தானே யுண்டாகிய வக்கினியினாலே வெந்து விளைந்த சாம்பலை யெடுத்துக் கொள்வது. (இஃதன்றி செயற்கையா யுள்ள செங்கற் சூளை, குயவன் சூளை முதலியவற்றின் சாம்பலை எடுக்கலாம்) அதிலே பஞ்சகௌவியத்தை வாமதேவ மந்திரத்தினாலே வார்த்து, அகோர மந்திரத்தினாலே அள்ளிப் பிசைந்து, உருட்டிப் பதரை விரித்து, அதன்மேலே தற்புருட மந்திரத்தினாலே வைத்துச்சிவாக்கினியினாலே தகனம் பண்ணி, ஈசான மந்திரத்தினாலே யெடுத்துக்கொள்க. (இது உபகற்பமாகும்) (இடி விழுந்த விடத்தில் உண்டாகிய திருநீறும் மலையுச்சியிலும் பூமியிலும் விளைந்த திருநீறும் அகற்பமெனப்படும். அதனைமூலமந்திரங் கலாமந்திரங்களினால் சுத்திசெய்து தரிக்கலாம்) இதுவே கற்பம், அநுகற்பம், உபகற்பம், என மூவகை யிலக்கணமும் அகற்பத்தி னிலக்கணமுமாம்.

இவ்வாறு விளைந்த விபூதியை யெடுத்து வைத்துக்கொள்ள வஸ்திரத்தினாலும், புலித்தோல் மான்றோலினாலும் பைசெய்துகொண்டும் வில்வக் குடுக்கை, சுரைக்குடுக்கை முதலியவைகளிலும் விபூதி யெடுத்து வைத்துத் தரிக்கலாம். குடுக்கையின்றிப் பிறவற்றிலுள்ள விபூதியைக் கவிழ்க்கலாகாது. விபூதிப்பைக்கு அகலம் எட்டங்குலமும் உயரம் பன்னிரண்டங் குலமும் வாய் வட்டமா யிருத்தல்வேண்டும்.

நடுவிரல் மூன்றினாலும் உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறு தானங்களிலும், நெற்றி, மார்பு, புயங்கள் என்னுமிடங்களில் அவ்வாறங்குலமும் மற்றைய வுறுப்புக்களில் ஒவ்வோரங்குலமும் அளவினதாய் ஒன்றை ஒன்று தீண்டாது, அகலாது, வளையாது, இடையறு திருத்தல் வேண்டும். இப்படியாயின் குற்றமாம் விதித்த நீளத்திற்குறைந்தால் ஆயுள் குன்றும், மிகிற் றவுங் கெடும்.

தன்னைத்தரித்தவர்க்கு ஐசுவரியத்தைக் கொடுத்தலால் பூதியென்றும், இரக்ஷித்தலால் இரக்ஷை யென்றும், சிவத்துவத்தை விளக்குவதால் பசிதமென்றும், பாவங்களை நீக்கலால் பஸ்மம் என்றும், உயிர்களது மலத்தைக் கழுவுதலால் க்ஷாரம் என்றும் பெயர் பெறும்.

விபூதி தரிக்கும் போதாவது, எடுக்கும் போதாவது கை தவறியேனும் பதமாறு வளவாயினும் சிந்தினால் நரகத்தில் விழுந்து துயருறுவராதலால் விபூதி சிந்தில் அந்தத் தலத்தைச் சுத்திசெய்து தாளத்திரயம் பண்ணிச் சங்கமுத்திரையினாலே அதனைத் தன்னிடத்தைத் தொடுக்க வேண்டும். ஆசாரியர் முன்னும் சிவாக்கினி முன்னும் சிவபெருமான் முன்னும் முகத்தைத் திருப்பி நின்று தரித்தல் வேண்டும். இங்ஙனமன்றிப் பாவிகள் முன்னும் அசுத்த நிலத்தும் வழி நடக்கும்போதும் ஒரு கையால் வாங்கிய விபூதியும் விலைக்குவாங்கிய விபூதியும் தரிக்கலாகாது.

நித்திரை விட்டெழுந்த வுடனும், தந்த சுத்தி செய்தவுடனும், சூரியனுதிக்கும்போதும், சூரியனத்தமிக்கும் போதும், போசனத்திற்குப் போம் போதும், போசனம் முடிந்த பின்னும், சந்தியா காலங்களிலும், நித்திரைக்குப் போம்போதும் விபூதியாவசியந்தரித்தல்வேண்டும்.

விபூதி யணியாதார் முகம் சுகோடொக்கும்
விபூதி யணிந்தே புறத்திற் புறப்படுக.

பொது நிலைக்கழக விழா

[பல்லாவரம் பொதுநிலைக்கழக மாணவர்]

[இக்கழகத்தினர் அனுப்பிய கீழ் வரும் அறிக்கைகளை மிக மகழ்ச்சியோடு வெளியிடுகிறோம். இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் ஆதரவு புரிய வேண்டுகிறோம். பத்திராசிரியர்.]

முதல் அறிக்கை

'சமரச சன்மார்க்க சங்கம்' அல்லது பொதுநிலைக் கழகம் என்பது 1911-ஆம் ஆண்டு, ஏப்பிரல் திங்கள் 22-ஆம் நாள் ஆசிரியர் மறைமலை அடிகளால் பல்லாவரத்தின்கண் நிலைநிறுத்தப்பட்டது. பிறப்பு இறப்பு இல்லா எல்லாம்வல்ல முழுமுதற் கடவுள் ஒருவரையே அன்பினால் வழிபட்டுப், பிறவியைத் தூய்மைசெய்யும் முறைகளும், எல்லா உயிர்களிடத்தும் அன்பும் அருளும் பூண்டு ஒழுகும் ஒழுக்கத்தின் உயர்வும் எங்கும் பரவுமாறு செய்தலே இதன் நோக்கம். பண்டைத் தமிழாசிரியராகிய தொல்காப்பியரும், திருவள்ளுவர், நக்கீரர், மாணிக்கவாசகர், திருமூலர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், பட்டினத்தடிகள், மெய்கண்ட தேவர், தாயுமான அடிகள், இராமலிங்க அடிகள் முதலான ஞான குரவர்களும் அறிவுறுத்திய அருளுரைகள் அத்தனையும் இறைவனிடத்து அன்பும் உயிர்களிடத்து அருளும் என்னும் இரு பேரொழுக்கங்களையே இருகண்களாக் கொண்டு நிற்றலால், அவர் தந்த அவ்விருகண்களைக் கொண்டே மக்கள் இறைவனைக்கண்டு அவன் திருவடிப்பேற்றினை எய்துதல் வேண்டுமென்பதே இதன்கோட்பாடு.

இக்கழகம் உலகியல் முறையில் நடத்தப்படுவ தொன்றன்று; ஆசிரிய மாணாக்க முறையில் வைத்து மேற் கூறிய உண்மைகளை உலகிற் பரப்பு வதையே கடப்பாடாகக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியர் மறைமலையடிகள் ஆவர். இழக்கழகத்தின் கோட்பாடு களுக்கு இசைந்து, ஆசிரியர் மறைமலையடிகள்பால் மெய்யறிவு கேட்ட மாணாக்கர்களும், இதன் கோட்பாடுகளைப் பரவச் செய்யும் நண்பர்களும், இதற்குப் பலவகையால் உதவி புரியும் நேயர்களும் இக் கழகத்திற்கு அன்பராவர். இஃதிருக்குமிடம் பல்லாவரத்தில் மறைமலை யடிகளின் திருநிலையமாகும்.

இதன் கொள்கைகளைப் பரவச்செய்தற் பொருட்டு மறைமலையடிகளால் "ஞானசாகரம்" எனப் பெயரிய இதழ் 28-ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றது; அடிகளால் அரிய பெரிய நூல்கள் பற்பல வெளிப்படுத்தப்பட்டன, பட்டு வருகின்றன; இவை தம்மையெல்லாம் பதிப்பிடுதற்கு ஓர் அச்சுக்கூடமும் அடிகளால் அமைக்கப்பட்டு நடைபெறுகின்றது.

ஆசிரியர் மறைமலையடிகள் தாம் பயிலுதற்கும் ஆராய்ச்சி செய்தற்கும் என்று பெரிது முயன்று பெரும் பொருட் செலவு செய்து, இன்றுவரையிற் றொகுத்து வைத்திருக்கும் இரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்தைந்து தமிழ் ஆங்கில ஆரிய நூல்களைப் பழுதுறாமல் ஒழுங்குற வைத்துப் பயன் படுத்துதற்கு மாணிக்கவாசக நூல் நிலையம் ஒன்றும், அதன்கண் எல்லாம் வல்ல தனித் தலைமைக் கடவுளை வைத்து வழிபடுதற்கு அம்

பலவாணர் திருக்கோயில் ஒன்றும் தமது திருநிலையத்தின்மேல் அமைப்பான் விழைந்து, 1929, டிசம்பர், 7-ஆம் நாள் திருவருளை முன்னிட்டுத் துவங்கிச், சென்ற ஒன்பது திங்களில் அவற்றைக் கட்டி முடித்திருக்கின்றார்கள்.

திருக்கோயிலில் தாம்வைத்து வழிபடுதற்கும், வழி படவரும் அன்பர்கட்கு இம்மை மறுமைக்குரிய எல்லா நலங்களும் பெருகுதற்கும் இறைவனை எழுந்தருளச் செய்தற்பொருட்டு அவர்கள் விழைந்தபடியே அம்பலவாணர் திருவுருவமும், அம்மை திருவுருவமும், மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தர் திருவுருவமும், மிகவும் அழகாக ஐந்து லோகக் கலவையில் அமைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இவற்றின் செலவுகட்கெல்லாம் ஏழாயிர ரூபா தமது பொருளிலிருந்து இவ்வொன்பது திங்களிற் செலவு செய்திருக் கின்றார்கள். இங்ஙனமே தமது திருநிலைய அமைப்புக்கும், நூல்கட்கும், தம்முடைய நூற்பதிப்புகட்கும், அச்சுக் கூடத்திற்குமாக இதுகாறும் இலட்ச ரூபாய்க்குமேற் செலவு செய்திருக்கின்றார்கள்.

பொது நிலைக்கழக விழாப் பேரவை

இவ் விழாப் பேரவை நடத்துவதன் நோக்கம்:—கல்வியறிவுடைய நன்மக்கள் ஓராண்டுக்கு ஒருமுறையேனும் இருமுறையேனுந் தக்க சான்றோர் ஒருவர் முன்னிலையில் ஒருங்குகூடித், தாம் கற்றறிந்த அரும்பெரும் பொருள்களை வெளியிட்டு, ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவி, மேலும் மேலும் உலகத்திற்குத் தாம் ஆற்ற வேண்டுங் கடமைகளை நன்குணர்ந்து நன்கு நடைபெறச் செய்தாலன்றி, அவர்களும் மேல் நிலை யடைதல் இயலாது, உலகத்தாரையும் மேலேற்றல் இயலாது. ஆகவே, கல்வி யறிவிற் சிறந்த அறிஞர்களை, ஆசிரியர் மறைமலையடிகள் முன்னிலையிற் கூட்ட வேண்டுவது ஒன்று.

இரண்டாவது: இத் தமிழ்நாட்டின் கண் எத்தனையோ கழகங்களுங் கழகக் கூட்டங்களும் நடை பெறுகின்றன. அவற்றுள்ஒன்றுவது,தான்வருவிக்குங் கற்றார்க்குங்,கற்றவைகளைஎடுத்துரைக்கும் விரிவுரையாளர்க்கும், அருந்தமிழ் நூல்கள் எழுதி வெளியிடும் நூலாசிரியர்க்கும் பொருளுதவியேனும், அவர்கட்குப் பயன்படும் வேறு எவ்வகையுதவியேனுஞ் செய்யக் காண்கிலேம். அவர்கட்கு எவ்வகை யுதவியுந் தாம் செய்யாமல் அவர்கள்பால் எல்லா வுதவியுந் தாம் பெற முயல்கின்றன; முயன்று பெறுகின்றன. மேலும், அக்கழகங்கள் பொது மக்களிடம் பணம் திரட்டுவதிலுந், தேடிய பணத்தை இடம் அமைப்பதிலுந் 'திங்கள் இதழ் கிழமை யிதழ் நடத்துவதிலும், வருவார் போவார்க்கு உணவு அளிப்பதிலும், விழாக்கள் எடுத்தலிலுங், கோயில் மடங்கள் கட்டுவதிலுஞ் செலவழித்து விடுகின்றன. இவ் வழிகளிற் பொருட் செலவு செய்தல் நன்றேயாயினும், இதனைவிடக் கற்றார்க்கும் விரிவுரை செய்வார்க்கும் நூலாசிரியர்க்கும் மாணக்கர்க்கும் உதவி செய்வது தான் நிலையான பயனைத் தரும். ஆதலால், இதுதான் முதன்மையாகச் செயற்பாலது; மற்றவைகள் இதனையடுத்துச் செயற்பாலன. ஆனல், இப்போதுள்ள கழகங்களோ முதன்மையல்லா வழிகளிற் பொருளை மிகச் செலவிட்டு, முதன்மையான வழியில் ஒரு சிறிதும் உதவி செய்வதில்லை;

இதனால், தமிழ் கற்பார் தொகை நாளுக்குநாட் சுருங்குவதோடு, அரிய பெரிய தமிழ் நூல்கள் எழுதுவாரும் இல்லையாகின்றனர். கற்றவரையுங் கற்பாரையும் நூலாசிரியரையும் பாதுகாத்தலே முதற்பெருங் கடமையாதலுணர்ந்து ஆங்கிலேயர் தம்மிற் கற்றார்க்குங் கற்பார்க்கும் எல்லா வகையான உதவியுஞ் செய்து வருகின்றனர்; அதனாற்றான், அளவுபடாத அரும்பெரு நூல்களுங் கற்றவர் தொகையும் ஆங்கில மொழியில் நாளுக்கு நாட் பெருகி வருகின்றன.

ஆதலாற், பொதுநிலைக்கழக விழா நடக்குங் காலங்களில் விரிவுரை செய்தற்கு வருவிக்கப்படுங் கற்றார்க்குப் பொருளுதவி செய்வதோடு, அரிய தமிழ் நூல்கள் எழுதுவார்க்குங் கற்பார்க்கும் அவ்வுதவியினைச் செய்தல், செய்வித்தல் வேண்டுமென்பது பெருநோக்கம்.

மூன்றாவது: தமிழ்கற்கும் அவாமிகுந்துள்ள இளைஞர்க்கு உணவும் இருப்பிடமுந்தந்து, ஒழுங்கான முறையில் தமிழ், ஆங்கிலம், வடமொழி கற்பிக்குஞ் செந்தமிழ்க் கல்லூரி அமைப்பித்து, அதனை நடத்தும் பொறுப்புமுற்றும் ஆசிரியர் மறைமலையடிகள் பால்வைத்து அதனை நடைபெறச் செய்தல்.

நான்காவது: நீண்டகாலம் உயிரோடிருந்து பிறவியைப் புனித மாக்குதற்குத்தக்க தவவொழுக்கங்களைத் தகுதி வாய்ந்த மாணாக்கர்க்கு ஆசிரியர் மறைமலையடிகள் வாயிலாக அறிவுறுத்தல்.

ஐந்தாவது: புலாலுண்ணல், சிறு தேவதைகட்குப் பலியிடுதல் முதலிய வற்றால் உயிர்கட்கு வருந்துன்பங்களை யொழித்தலும், நோய் வறுமை அறிவில்லா நடைகளால் மக்கள் வாழ்க்கையிற் காணப்படுங் கொடுந் துன்பங்களைத் தீர்க்கும் எளிய முறைகளைக் காட்டுதலும் ஆகும்.

இவ்விழா ஆண்டுக்கு ஒரு முறையேனும் இரு முறையேனும் பல்லாவரத்திற், பொது நிலைக்கழக நிலையத்தின்கண் ஆசிரியர் மறைமலையடிகளையே தலைமையாய்க் கொண்டு நடைபெறும், நிலையம் இருக்கும் இடம் அகன்ற ஓர் ஏரியின் கரையிற், புகைவண்டி நிலைக்கு அருகாமையில் நாற்புறமும் மலைகளாற் சூழப்பட்டு அழகிய காட்சியினைத் தருவதுடன், வரும் அன்பர்கட்கு மிக்க வசதியினையும் பயப்பது. சென்னைமா நகரமும், திருவொற்றியூர், திருமயிலாப்பூர், திருவான்மியூர், திருக்கழுக்குன்றம், திருக்காஞ்சி முதலான சிவபிரான் திருக்கோயில்களும் நாற்புறமுஞ் சூழ உடையது. நான்கு மலைகளுக்கு நடுவேயுள்ள திரிசூலம் என்னும் பழைய சிவபிரான் கோயில் ஒன்றும், சேக்கிழார் பெருமான் திருக்கோயில் உள்ள குன்றத்தூரும், ஆழ்வார்களாற் பாடப்பெற்ற திருநீர்மலை என்னுந் திருமால் கோயிலும் இதற்கு அருகில் இருக்கின்றன. ஆகையால், இம்மை மறுமை யின்பங்களை யடைய விரும்பும் அன்பர்கள், பொது நிலைக்கழக விழாவுக்குத் தவறாமல் வந்து, கல்வி வல்ல சான்றோருரைகளைக் கேட்டும் அவர்களோடு அளவளாவியும் இப்போது குறிப்பிட்ட இறைவன் திருக்கோயில்களைப் போய் வணங்கியுந் தம் பிறவிப் பயனைப் பெற்று இன்புற்று வாழ்தல் வேண்டும். பெறுதற்கரிய இந் நலங்களைப் பெற்று வாழ்வதற்குப் பொது நிலைக்கழக ஆண்டு விழாவைத் தவிர, வேறு நல்லவாயில் கிடைப்பது அல்

லல் மிகுந்த இம் மக்கட் பிறவியில் அரிதாகையால், மெய்யன்பர்கள் இதனைத் தவறவிடுதல் ஆகாது.

பொது நிலைக்கழக விழா தைப்புனர் பூசம் முதல் மூன்று நாட்கள் நடைபெறும். பூசத்தன்று கழகத் திருக்கோயிலில் உள்ள அம்பல வாணர்க்கு விழாவெடுத்து வழிபாடு செய்தல்; மூன்று நாட்களிலும் ஆசிரியர் மறைமலையடிகள் தலைமையில் கலைத்துறையில் வல்ல அறிஞர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தல்; இறுதியில் மறைமலை அடிகள் தம் மாணுக்கருடன் மட்டுமிருந்து, அவர்க்கு வேண்டும் இம்மை மறுமை நலங்களைச் சிறப்பான முறையில் அறிவுறுத்துந் தனிக்கூட்டம் நடைபெறல் ஆகிய இவை நிகழும்.

இவ்விழாவுக்கு வரும் அன்பர்கட்கு உணவும் இருப்பிடமும் அமைக்க வேண்டிய செலவு இருத்தலின், அன்பர் ஒவ்வொருவரும் அச் செலவுக்குப் பயன்படும் பொருட்டு ஆறு ரூபா முன்னரே அனுப்பி வைத்தல் வேண்டும்; அங்ஙனம் அனுப்புகிறவர்கட்கு மட்டும் உணவுச் சீட்டும் நுழைவுச் சீட்டும் கழக ஆசிரியரிடமிருந்து வரும். உணவும் இருப்பிடமும் வேண்டாதவர்கள் தலைக்கு ஒரு ரூபா அனுப்பினால் நுழைவுச் சீட்டு மட்டும் அனுப்பப்படும். நுழைவுச்சீட்டு இல்லாதவர்கள் அவையினுள் வருதற்கு இடம் பெருர். ஆறு ரூபாயோ ஒரு ரூபாயோ செலுத்தும் அன்பர்கள் எல்லார்க்கும் விரிவுரையாளரின் சொற்பொழிவுகள் பதிப்பிட்ட புத்தகம் விலையின்றி அனுப்பி வைக்கப்படும்.

பொதுநிலைக்கழக மாணவராயுள்ளவர்கள் கழக ஓராண்டுக் காணிக்கை ஆறு ரூபாயோடு, கழகவிழாவின் செலவுக்கு மேற்கொண்டு ஆறு ரூபாயுஞ் சேர்த்துப் பன்னிரண்டு ரூபா அனுப்புதல் வேண்டும். அவர்கட்கு உணவுச் சீட்டு நுழைவுச் சீட்டுடன் தனிக்கூட்டச் சீட்டொன்றும் மறைமலையடிகளிடமிருந்து வரும். சொற்பொழிவுப் புத்தகம் மாணுக்கர் எல்லார்க்கும் விலையின்றிக் கொடுக்கப்படும்.

கழகநோக்கங்கள் நிறைவேறுதற்கு உதவியாக இருபத்தைந்து ரூபாய்க்கு மேல் நன்கொடை யளிக்கும் அன்பர்கட்கு உணவுச் சீட்டு நுழைவுச் சீட்டுகள் அனுப்புவதுடன், அவர்களின் பெயர்களுங் கழக அறிக்கையில் வெளியிடப்படும். அவர்கட்குஞ்சொற்பொழிவுப் புத்தகம் விலையின்றி அனுப்பப்படும்.

அன்பர்கள் உதவும் மேற்குறித்த தொகைகளி லிருந்து கழக விழாச் செலவுக்குச் செலவழிந்தன போக, மிச்சத்தொகையில் இருகூறு கழகநூல் வெளியீடுகட்கும், ஒரு கூறு தனித் தமிழ்க் கல்லூரிப் பொருள் வைப்பிற்கும் வைத்து, எஞ்சியது விரிவுரையாளர்க்கு இறுதியில் பகுத்துக் கொடுக்கப்படும்.

இவ்வரும் பெருமுயற்சி இனிது நடைபெறுமாறு செந்தமிழ் வழங்கும் நாடுகளில் உள்ள அன்பர்களெல்லாரும் உதவிசெய்து, இம்மை மறுமை நலங்களைப்பெற்று இறைவன் திருவருளுக்கு உரியராகுக!

பணங் கடிதம் முதலியனவெல்லாம் பல்லாவரம், பொதுநிலைக்கழக ஆசிரியர் மறைமலையடிகட்கே அன்பர்கள் அனுப்பிவைத்தல் வேண்டும்.

இங்ஙனம்:

பொதுநிலைக் கழக மாணவர்கள்.
பொதுநிலைக் கழக நேயர்கள்.

இரண்டாவது அறிக்கை

எல்லாம் வல்ல அம்பலவாணர் திருவருளால் பொது நிலைக்கழக விழா வரும் தைத்திங்கள் புனர்பூசத்தன்று துவங்கி (1931, பிப்ரவரி 1, 2, 3,) மூன்று நாட்கள் நடைபெறும். தைப்பூசத்தன்று அம்பலவாணர் திருக்கோயிற் திருக்குட முழுக்கும், மாணிக்கவாசக நூல்நிலையத் திறப்பும், அந்நாள் மாலையில் "அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மையும் ஞான யோகமும்" என்பதுபற்றிய மறைமலையடிகளின் விரிவுரையும் நடைபெறும். மூன்று நாட்களிலும் பொதுநிலைக் கழக நிறைவுவிழாப் பேரவை நடைபெறும்; அம்மூன்று நாட்களிலும் கலைவல்ல அறிஞர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அரிய பெரிய பொருள்களை எடுத்துச் சொற்பொழிவு நிகழ்த்துவர். அந்நாட்களில் மறைமலையடிகளும் "தமிழும் அதன் பெரும் பயனும்" என்பதுபற்றித் தமிழிலும், "நம் நாட்டவர் முன்னேற்றம்" என்பது பற்றி ஆங்கிலத்திலும் பேருரை நிகழ்த்துவார்கள். அவ்விரிவு பின்னர் வெளிவரும்.

இவ்வரும் பெரு விழாவுக்கு வரும் அன்பர்கள் ஒரு திங்களுக்கு (ஒரு மாதத்திற்கு) முன்னமே கழக ஆசிரியர்க்குத் தெரிவித்தல் வேண்டும். பல்லாவரத்தில் உணவு வசதி இருப்பிட வசதி கிடைப்பது அரிதாகையால், மூன்று நாட்களும் உணவும் இடமும் பெறவேண்டுவோர் தலைக்கு ஆறு ரூபா முன்னரே அனுப்பிவைத்தல் வேண்டும். அவை நடக்கும் நாட்களில் திடீரென வந்து உணவும் இடமும் பெற விரும்புவார்க்கு அவை கிடைத்தல் அரிது.

இந்த ஆண்டில் ஓராயிரம் பேர்க்குத்தான் உணவும் இடமும் ஒழுங்கு படுத்தல் இயலும்; ஆதலால், இவ்விழாவுக்கு வரும் அன்பர்கள் முன்னதாக ஆறு ரூபா அனுப்பி உணவுச் சீட்டு நுழைவுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஆயிரம் பேர் சேர்ந்தபின் அனுப்புவோர் தொகை திருப்பி விடப்படும்.

மேற்குறித்த விழா மூன்றும், மிகவுஞ் சிறப்பாக நடத்தவேண்டுமென்றும், விரிவுரையாளர்க்கு வழிச் செலவும் நன்கொடையும் அளிக்க வேண்டுமென்றும், அரியபெரிய தமிழ் நூல் வெளியீடுகட்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென்றும், தனித்தமிழ்க் கல்லூரியொன்று தமது பார்வையில் வைத்து மாணாக்கர்க்கு உணவுகொடுத்துச் சம்பளமின்றி ஒழுங்கான முறையில் தமிழ் ஆங்கிலம் வடமொழி என்னும் மூன்றுங் கற்பிக்க வேண்டுமென்றும் கழக ஆசிரியர் மறைமலையடிகள் பெரிது விரும்புதலால், தமிழ் அன்பர்கள் ஒவ்வொருவரும் தக்கபடி நன்கொடை உதவி இவற்றை நிறைவேற்றி வைத்து அழியாப் புகழ் புண்ணியங்களைப் பெறுவார்களாக!

அன்பர்கள் உளம் உவந்து எவ்வளவுக்கு மிகுதியாக நன்கொடைப் பொருள் உதவுகின்றார்களோ அவ்வளவுக்கு மிகுதியான சிறப்புடன் மேற்குறித்த விழா மூன்றும், மற்றையவும் இனிது நடைபெறும்.

இங்ஙனம் :

பொதுநிலைக் கழக மாணவர்கள்.

திலகவதியார் சரிதத்தின் அரும்பொருள்கள்

[பண்டிதை - கிருஷ்ணவேணி யம்மாள்]

(இதழ் க, உ0அ-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் திலகவதியார் துக்கமென் பது இன்னதெனத் தெரியாதவ ராயும் மிக்க இளமைப் பருவமுடைய வராயு மிருந்தபோதே, தாய், தந்தை, கணவன் ஆகிய மூவரையும் ஒருங்கே யிழந்து சொல்லொணு துயரத்தை யடைந்த காலத்தும், அறிவுடையோர் தங்களுக்கு நேரும் ஒவ்வொரு துன்ப மும் நல்லுப தேசத்தைச் செய்ய வந்த ஞான குருவென நினைத்து, நன் மார்க்கத்தைக் கடைப்பிடித்துத் தங் கள் பிறவிப் பயனை யெய்துவார்கள், எனக் கூறுவதற் கேற்ப அம்மையா ரும் அச் சிறு வயதிலேயே ஆடம்பர மான ஆடை யணிகளை விலக்கிப் பிற விப் பயனை யடைதற்குரிய அன்பை சிவபிரான் மாட்டுச் செலுத்திவந்தனர்.

ஆனல் நம் பெண்மணிகளிற் சிலர் தமக்குமிக்க அன்புள்ள தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், கணவன், மக்கள் முதலியவர்களில் யாரையே னும் இழக்க நேர்ந்த காலத்தில், இது தம்பழைய வினை வசத்தால் நேர்ந்த தென்றும், உலகத்தில் தோன்றியது அழியும் என்றும் அறிந்திருப்பினும் அவ்வுணர்ச்சியை மனதில் ஊன்றக் கொள்ளாமலும்,

“ஊருஞ் சதமல்ல உற்றர் சதமல்ல
 வுற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல
 பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல
 தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்
 கச்சி யேகம்பனே”

எனப் பட்டினத்துப் பிள்ளையாரும்,

“ஊரிலேன் காணியில்லை
 உறவுமற் றெருவரில்லை
பாரில்நின் பாதமூலம்
 பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே
 கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர்? களைகண் அம்மா!
 அரங்கமா நகருளானே”

எனத் தொண்டரடிப் பொடி யாழ்வா ரும் திருவாய் மலர்ந்துள்ளவைகளை மனத் திருத்தாமலும், நிலையற்ற சுற் றத்தாரிடம் மிக்க அன்பு பாராட்டி, அவர்கட்குக் கெடுதி நேரிட்டபோது அவர்கட்காகப் பெரிதும் வருந்தி, இத் துக்கம் நம் பற்றை யொழித்து இவ் வுலக நிலையை யுணர்த்தி நம்மை நன் மைப் படுத்துவதற்கே வந்தது. இனி இதிலிருந்து தெளிந்து, இன்றிருந்து நாளைக்கு மறையும் சுற்றம் பொருள் முதலியவற்றில் வைத்துள்ள பற் றை யொழித்து இறைவனிடத்து அன்பு பாராட்டி நம் ஆன்மா உய்யும் வகையைத் தேடுதல் வேண்டுமென் னும் பெருந்தன்மையைக் கொள்ளா மல் “யான் அன்பு பாராட்டிய சுற்றத் தாரெல்லாம் என்னை விட்டுப் பிரிந்த னர், இனி எனக்கென்ன வேண்டும், கோயிலென்ன, குளமென்ன இத் துணை நாட்களும் கடவுளை நம்பியதற்கு என்ன பயன் கிடைத்தது. வஞ்சனைக் காரத் தெய்வம் அநியாயஞ் செய்கின்ற வர்கட்கு நன்மை செய்கின்றது. கடவு ளெங்கே, பூதமெங்கே போதும், போதும் கடவுளை நம்பி நட்டாற்றில் நின்றதெல்லாம், ஏதோ உயிர் போகா ததினுலே பாழும் வயிற்றிற்கு அவ்

வளவு அன்னம் தின்று நம் துக்கத்தை நினைத்துக் கொண்டிருக்க வேண்டியது தான்" என தன் துக்கத்தை நினைத்து, நினைத்து தன் மனதைப் புண்ணாக்கிக்கொள்வது மாத்திரமேயன்றி, தன்னைப் பார்க்க வருகின்றவர்களிட மெல்லாம் தன் துக்கத்தையே கூறி அவர்கள் மனதையும் துன்பத்திற்குள்ளாக்கி என்றும் துக்க வட்டத்திலேயே தம் காலத்தைக் கழிக்கின்றனர்.

திலகவதியாரோ,

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொரு
வாழ்நாள் வழி யடைக்குங்கல்" [வன்

என்னும் வாக்கியத்தின்படி தம் வாழ்நாட்களை வீணாக்காமல் தங் காலத்தை மிக்க பயனுள்ளதாகக்கழித்து வந்தார். இவ்வம்மையார் இவ்வாறு கற்பொழுக்கத்தையும், நன்மார்க்கத்தையுங் கைக்கொண்டொழுகவில்லையாகில் தம் பின்னவரால் சைவ சமயம் முன்னேற்ற மடைவது எவ்வாறு முடியும்? தேகத்திற்கு ஒளியைத் தருகின்ற இரத்தினத்தினை விழைத்த ஆபரணங்களைக் காட்டிலும், ஆன்மாவிற்கு மிக்க அருள் ஒளியை வீசுகின்ற தேவாரங்களாகிய அழியாப்பெரு நிதி யாங்ஙனம் வெளிவந்திருக்கக் கூடும்? இத்தேவாரங்களைத் திருவாய்மலர்ந்தருளிய அப்பர் அருள் பேற்றை யடைவதற்குக் காரணமாயிருந்தவர் அம்மையாரேயன்றோ? ஊன்றி ஆராயின் அம்மையார் பொதுவாகப்பெண்களை மேன்மைப்படுத்த வந்த ஓர் கற்பொளி என்றும், சிறப்பாக சைவ சமயத்தை விளக்கவந்த ஒரு நந்தா விளக்கெனவும் கூறுதல் வேண்டும்.

நம் இந்தியா தேசத்துப் பெண்மணிகளில் பலர் இங்ஙனமாகிய கற்பொழுக்கத்தில் சிறந்து விளங்கினார்களென்பது யாவரும் அறிந்த விஷயமேயாகும். அவர்களில் சிலரை இங்கு கூறுவாம். அநுமான் சீதாபிராட்டியாரை இலங்கை நகரைச் சார்ந்து அசோகவனத்திற் கண்டு இராமபிரால் கூறியனுப்பிய விடயங்கள் யாவற்றையுந் தெரிவித்த பின்னர், "இராமபிரான் வந்து உம்மை அழைத்துச் செல்லுமளவும் நீர் இவண் இருந்து வருந்துவதைவிட, என்னுடன் வருவீரேல் உம்மை அதிக பயபக்தியுடன் கொண்டு போய் தசரத குமாரனிடம் ஒப்புவித்து மகிழ்வேன்" எனக் கூற, இதைச் செவி யேற்ற அம்மையார், "குற்ற மற்ற எனக்குப் பெருந் துன்பத்தையிழைத்த இவர்களைத் தக்கவாறு தண்டியாது விடின் இச்செருக்கினால் இன்னும் பல பெண்களுக்குத் தீங்கிழைப்பது மாத்திரமேயன்றி, அவர் செய்தது பிழையென்பதையும் உணரவியலாமற் போகுமன்றோ? அதன்றியும், இப்பெருங் குற்றத்தைச் செய்த அரசனைப் பெற்றிருக்கின்ற இவ்வூர் எலும்பு மலையாகவில்லையானால் பெண்களின் கற்பின் மாட்சி இன்னது என்பதைப் பிறர் அறிந்து கொள்வதற்குத் தக்க வழியை யான் எங்ஙனம் காட்ட முடியும்" என்பதற்கு

"பொற் பிறங்க லிலங்கை பொருந்தல
ரெற்பு மால்வரை யாகில தேமெனி
னிற் பிறப்பு மொழுக்கு மிழுக்கமில்
கற்பு யான்பிறர்க் கெங்ஙனங் காட்டுகேன்"

எனக் கூறினர்.

இன்னும்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்
திண்மை யுண்டாகப் பெறின்" [னுந்

எனப் பொய்யா மொழிப் புலவர் கூறியுள்ளபடி தூய்மையான கற்புடைய

பெண்களாலே அநேக உயர்ந்த காரியங்கள் செய்ய வியலுமேனும், தங்கள் கணவரின் சிறப்பைக் குறைக்கும்படியானதும், அவர்கள் பயனற்றவர்கள் என உலகம் நினைக்கக்கூடியதுமான விஷயங்களைத் தாங்கள் செய்ய முற்படுதல் தகுதியாகா தென்பதற்கு,

“ அல்லன் மாக்களி லங்கைய தாகுமோ
வெல்லை நீத்தவுல கங்கள் யாவுமென்
சொல்லினாற் சுடுவே னது தூயவன்
வில்லினாற் றற்குமா சென்று வீசினேன்”

எனச் சீதாபிராட்டியார்கூறியதே தக்க சான்றாகும். இதிலிருந்து பெண்களின் பெருந்தகைமை நன்கு விளங்குகின்றது.

இதன்றியும், மிக்க அறிவிற் சிறந்த அனுமான், தான் சீதாபிராட்டியைக் கண்டுவந்த விஷயத்தை இராமபிரானிடம் தெரிவிக்கும்போது,

“ கண்டனன் கற்பினுக்
கணியைக் கண்களால் ”

என்றும்,

“ விற்பெருந் தடந்தோள் வீர
வீங்குநீ ரிலங்கை வெற்பி
னற்பெருந் தவத்த ளாய
நங்கையைக் கண்டே னல்லே
னிற்பிறப் பென்ப தொன்று
மிரும்பொறை யென்ப தொன்றுங்
கற்பெனும் பெயர தொன்றுங்
களிநடம் புரியக் கண்டேன் ”

என்றும் அம்மையாரின் கற்பின் திறத்தைச் சிறப்பித்துப் பேசியுள்ளார்.

நம் தமிழ்நாட்டுப் பெண்மணிகளில் ஒருத்தியான மருதி என்பாள் பிறனொருவன் தன்னை அடாத எண்ணத்துடன் நோக்க, மனமிக நொந்து ஒன்றுந் தோன்றாளாய்,

மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம்
பெண்டி ராயிற் பிறர்நெஞ்சு புகாஅர்
புக்கேன் பிறனுளம் புரிநூன் மார்பன்
முத்தீப் பேணு முறையெனக் கில்லெனக்

கூறிப் பெரிதும் வருந்தினள். இவ்வுதாரணங்களினால் நம்நாட்டுப் பெண்மணிகள் கற்பொழுக்கத்தில் எத்துணைச் சிறந்து விளங்கினார்களென்பது தெற்றெனப் புலப்படா நிற்கும். அவர்களில் திலகவதியாரும் ஒருவராவர்.

இனித் திலகவதியார் தவவொழுக்கத்தை மேற்கொண்டு சிறப்படைந்த தன்மையைச் சிறிது ஆராய்வாம்.

அம்மையார் நிலையற்ற உலக இன்பங்களிற் சிறிதும் பற்றற்றாராய், பேரின்பத்தைத் தரும் பரம்பொருளே நிலையுள்ள தெனவும், அதன் அருளைப் பெறுவதற்கு முயற்சிப்பதே பிறவிப் பயனென்றும், அதுவே அழியாப் பெரும் பொருளென்றும் நன் குணர்ந்து தமக்குள்ள மற்ற சுற்றத்தாரையும் விட்டு, திருக்கெடில ஆற்றங்கரையில் கட்டப்பட்ட திருவதிகை வீரட்டானஞ்சென்று தனியே தவம் பூண்டு சிவபிரானுக்குத் திருத் தொண்டு புரிந்து வந்தனர். அங்ஙன மின்றி அவர் தம் வீட்டிலேயே இருந்து பற்றற்ற நிலையை அடையவேண்டுமென நினைத்திருப்பரேல், அது மிக்க கடினமாக முடியும். ஏனெனில் பேரின்பப் பேற்றினைக் கருதி மனத்துறவடைந்து தவம் பூண்டொழுக விரும்பும் அறிவுடை மக்கள், அஃதுணரா மாக்களிடையிருப்பரேல், நாயிடம் அகப்பட்ட தெங்கங்காயென, இவர்கள் அருமை அறியாது அநேகமாய் இவர்களைச் சோதித்துப் பலபட வீண் வார்த்தைகளைப் பேசி இவர்கள் மனதைப் புண்படுத்துவது மாத்திரமேயன்றித் தங்கள் குற்றங் குறைகளை அடிக்கடி அவர்களிடம் வந்து கூறி, இவர்கள்

தவ நிலையைக் கெடுத்து விடுவார்கள். ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் நிற்குந் தன்மையுடையதாகையால்ஒருகால் தாங்கள் வேறு நிலையில் மாறவுங் கூடுமெனக் கருதியே, பெரியோர்கள் மனிதர்கள் வாழப் பெறாத் தனியிடங்களிலும், எப்போதும் பக்திமான்கள் வந்து தங்குவதற் கிடமாகிய கோயில் பக்கங்களிலுமிருந்து தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வார்கள். இதனாற்றான் பெரும்பான்மையும் நம்மனோர்கள் கோயில்களை மலைகளின் பேரிலும், பூஞ்சோலைகளிலும், மனித சஞ்சார மில்லாத தனியிடங்களிலும் கட்டியிருக்கின்றார்கள். அங்ஙன மாயின் இறைவன் மாட்டு அன்பு செலுத்தி ஆன்ம லாபத்தை யடைய விரும்பும் ஒவ்வொருவரும் தனியிடங் கட்கே செல்லுதல் வேண்டுமா? இவ்வாறு சிறிது நல்வழிப்பட்ட ஆன்மாக்கள் யாவரும் தனிச்சென்று விட்டால், மற்றவர்களைத் திருத்தி நன்மார்க்கத்தில் செலுத்துகின்றவர்கள்தாம் யாவர்? என்பார்க்குக்கூறுவாம்: இங்ஙனந்தவத்தை விரும்பும் ஆன்மாக்கள் பலதிறப்பட்டிருப்பார்களாதலால் அவர்களில் இரண்டொரு சாராரைப்பற்றி மாத்திரம் இங்கு ஆராய்வாம். ஒரு சாரார், மற்றையோரையும் நன்மார்க்கத்திற்குக் கொண்டுவர வேண்டு மென்னுங் கருணையினால் பலபேர் நடுவிலிருந்து கொண்டும் அவர்கட்கு அப்போதைக் கப்போது நல்லுப தேசங்களைச் செய்துகொண்டும் சமயம் வாய்த்த போது தாம் தனியே ஓரிடத்தி லிருந்து தம் ஆன்ம லாபத்தை நாடுவர். மற்றொரு சாரார் முழுதும் தாம் தனியே யிருந்து கொண்டு தம்பேரின்பப் பேற்றிற்கு முயற்சி செய்வது மாத்திரமே யன்றி மற்றை யோரும் நன்மை யடைய வேண்டுமென மனதில் எப்போதும் நினைத்து நினைத்து இறைவனை இறைஞ்சி, பிறருக்கும் நன்மையுண்டாக்க முயற்சிப்பார்கள். எங்ஙனமேனும் இருதிறத்தாரும் பிறருக்கு உதவி செய்வதில் குறைவுபட்டவர்களல்லர். ஆகவே தவத்திறம் பூண்ட திலகவதியார் இவ்விரண்டாஞ் சார்பையே சார்ந்தவராவர். இதற்குத் தாம் மனதினால் எண்ணி, எண்ணித் தம் பின்னவரைத் தம் வழிப்படுத்தியதே தக்க சான்றாகும்.

இனித் திலகவதியார், தம் பெரியோர்கள் மேற் கொண்டொழுகியதும், தாம் இளமை தொட்டுப் பின்பற்றி வந்ததுமான சைவ சமயத்தைக் கைவிட்டு சமண் சமயத்தை மேற்கொண்டொழுகிய தந் தம்பி திருநாவுக்கரசு சுவாமிகளை மேற்கூறிய சமண் சமயத்திலிருந்து சைவ சமயத்திற்குத் திருப்பிக் கொணர்ந்த பெருமையைப்பற்றி ஆராய்வாம்.

ஆன்மாக்கள் தத்தம் சமயங்களிலிருந்தே அவைகளிலுள்ள உண்மைப் பொருளை யறிந்து மேன்மையுறுவதற்குத் தக்க சாதனங்கள் பல விருப்பினும், அதிலுள்ள தத்துவங்களை எடுத்தோதி,மக்களின் மனதைச்சீர்திருத்துவதற்குத் தக்க குரவர்கள் கிடைக்காமையானும், அத்தகையோர் சிலரிருப்பினும், அவர்களைச் சென்றடைவதற்குத் தக்க வசதிகள் ஏற்படாமையானும் பெற்றோர் தம் மக்கட்கு இளமையிலிருந்தே மதசம்பந்தமான விஷயங்கள் பலவற்றையும் தக்க பொருளமைப்போடு சொல்லி அவர்கள் மனதில் பதியவையாமையானும் அநேக மூட வழக்க ஒழுக்கங்களையும் மதசம்பந்தமானது என மதக் கொள்கை

களோடு சேர்த்து விடுவதினாலும், நாம் தினந்தோறும் நடாத்தி வருகின்ற வாழ்க்கைக்கும், மதத்திற்கும் அதிக தூர மிருப்பதாகக் கருதுவதினாலும், மதசம்பந்தமாக நடைபெறும் பல விஷயங்கட்கும் காரணந் தெரியாமலும் அவைகளை அறிந்து கொள்ள ஆசைப்படாமலும் இருப்பதினாலுமே ஆதாரங்கள் ஒன்று மின்றி பொருள் செறிவு, தத்துவ உண்மை, நீதி மார்க்கம் முதலியன மிகப் பெறாத பல மதத்தினர்நம்மனோரை ஏமாற்றித் தம் வசப்படுத்துகின்றனர். ஒரு காலத்தில் செல்வத்திலும், பக்தியிலும், மதப்பற்றிலும் மிகச் சிறந்து விளங்கியதெனப் பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்ற நம் இந்தியா தேசமும், மதமும் தற்சமயம் மிகத் தாழ்ந்த நிலையிலிருக்கின்றன வென்பது யாவரும் அறிந்த விஷயமேயாகும். இதற்குக் காரணம் நமது சுறு சுறுப் பின்மையும், கவலையீனமுமே யன்றி வேறென் கூறுவது? மற்ற மதத்தினர் ஆறு வயதில் அறிந்து கொள்கின்ற கடவுட்டன்மையும், மத விஷயங்களும் நம்மனோர் அறுபது வயதிலுமறிவதில்லை. இது எத்துணை பரிதாபகரமானது. அதன்றியும் காலத்திற்கும், மனிதர்களின் நிலைமை, அறிவு முதலியவைகட்கும் தக்கவாறு அப்போதைக் கப்போது சில மாறுதல்களைச் செய்து பண்டிதர்களுக்கும், பாமரர்களுக்கும் பொருளாகுமாறு கடவுள் தன்மை மதக்கோட்பாடு முதலியவைகளை விரிவுபடுத்துவதற்கும் நம்மனோர்களில் பெரும்பாலோர் முன்னுக்கு வருவதில்லை. அங்ஙனம் சிற்சிலர் வரினும் அவற்றின் அருமை தெரிந்து ஆதரிப்பதுமில்லை. இதனாற்றான் வருடந்தோறும் நம் சகோதர சகோதரிகளில் எத்தனையோ பேரை பிறமதங்கட்குப் பலி கொடுத்து எக்காரியத்தையும் நிறைவேற்று வதற்குத் தக்க துணையின்றி துன்புறுகின்றோம்.

ஆனால்,

"யாதொருதெய்வங்கொண்டீர்அத்தெய்வமாகி மாதொரு பாகனார் தாம்வருவர்" [யாங்கே

என்றும்,

"நாட்டினன் தெய்வ மெங்கும் நல்லதோ ருள் தன்னாலே"

என்றும் நம் பெரியார் திருவாய் மலர்ந்துள்ளபடி எல்லாச் சமயங்களிலிருப்பதும் ஒரே கடவுள் ஆதலாலும், எந்த மதத்தைக் கொள்ளினும் அவர்களுக்கு, எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளே அருள் புரிவர் ஆதலினாலும் எந்த மதத்தை மேற்கொண்டால்தான் என்ன, இதற்காகப் பலமாறுபட்ட எண்ணங்கள் உண்டாவதற்குக் காரணம் யாது என்னும் ஆசங்கை யுண்டாகலாம். அத்துணை விரிந்த அறிவுடையராயின் ஏன் தஞ் சொந்த மதத்திலிருந்தே கடவுளருளைப்பெறக் கூடாது? எதற்காகப் பிறமதத்திற்குச் செல்லவேண்டும் என யோசித்தல் வேண்டுமல்லவா? இதை உற்று நோக்குங்கால் தம் புறக்கடையிலுள்ள ஆழமான சுத்தத் தண்ணீர் நிறைந்த கேணியின் பெருமையை அறியாமலும், அதைத் தெரிந்து கொள்வதற்கும், அதில் ஏதேனும் சிறிது குற்றமிருப்பின் அதனைப் போக்குவதற்கும் முயற்சி செய்யாமலும் அண்டை வீட்டுக்காரன் பல முயற்சிகளினால் சுத்தப்படுத்தி வைத்திருக்கும் ஆழமற்ற மிகச் சிறிய கிணற்றை நாடிச் செல்வதைப் போன்றிருக்கின்றது. அன்றியும் நம்மிடத்தில் தின்பதற்கு

அறவே ஒன்று மில்லாத காலத்திலல்லவோ பிறரிடத்தில் யாசகத்திற்குச் செல்லவேண்டும்? அங்ஙன மின்றி நிறைய தானியங்களேயும், காய் கறி முதலிய எல்லாவற்றையும வைத்துக் கொண்டு அவைகளை உண்பதற்கேற்ற வாறு பக்குவப்படுத்திப்புசிப்பதற்குச் சோம்ப லுள்ளவராய்த் தம்மிடத்தி லுள்ள பண்டங்களேயும் ஒழுங்கின்றி போட்டுவிட்டு, சிற்சில பண்டங்களைக் கொண்டு சீர்திருத்தி உண்கின்ற மற்ற வர்கள் வீட்டிற்குச் சென்று உண்டு காலங் கடத்திஞல் அது எத்துணை அற்பமாகத் தோன்றிப் பிறரால் அவமதிக்கப்படுமோ, அதைப் போன்றே தம் மதத்திலிருந்து கொண்டே, இக் காலத்திற் கேலாத சிற்சில ஊழல் களைக் களைந்துவிட்டு மேன்மை யடையாமல் பிற மதத்திற்குச் செல்லுதல் பழிப்புக் கிடமாகும். உற்று நோக்கின் ஒவ்வொரு மதத்திலும் சில ஊழல்கள் காணப்படத்தான் செய்யும். ஏறக்குறைய எல்லா மதங்களும் ஒரு தன்மையான உண்மைகளேயே சாற்றுகின்றன. ஆதலால் உண்மை நெறியைக் கடைப்பிடித் தொழுகி ஆன்ம லாபத்தை யடைய விரும்புவோர் எவராயினும் தங்கள் சொந்த மதத்திலிருந்தே பிறவிப் பயனை யடையக் கூடும்.

இன்னும் கடவுள் தன்மையையும், நல்லொழுக்க முறைகளேயும் கூறுகின்ற எம்மதமும் தாழ்ந்ததாகாது. ஆனல் அந்தந்த மதத்திலுள்ளோர், தமமதக் கோட்பாடாகிய ஜீவகாருண்யம், தெய்வ நம்பிக்கை முதலிய தன்மைகளிலிருந்து மாறுபடுங்கால், அவர்களால் அம்மதமும் குறைபாட்டை யடைந்து அங்குள்ள தெய்வததன்மை குறைந்து விடுகிறது. இதனுற்றுன் மதக் குறைவுபாடுகள் உண்டாகின்றன. இதற்குதாரணமாக, தெய்வ தத்துவம், ஆன்ம தத்துவம் முதலியவைகளில சைவ வைஷ்ணவ சமயங்களேப் போன்று அத்துணைச்சிறப்புவாயாமலிருப்பினும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு சுவாமிகள் காலத்திற்கு முன்னிருந்த பௌத்த, சமணசமயங்கள் அதி உன்னத நிலையிலிருநதனவெனவும், இவர்களுடைய காலத்தில் அச்சமயங்களிலிருந்தவர்கள் தங்கள் மதஸ்தாபகர்களின் கோட்பாட்டி லிருந்து சிறிது வழுவி, பல கொடுமைகளைச் செய்வதற்கு ஏற்பட்டதனுல் அம்மதங்களிலிருந்த தெய்வத் தன்மை குறைவுபட்ட தென்றும் அறிவுடையோர் கூறக் கேட்கின்றேம்.

இங்ஙனம் ஜீவகாருண்யத்திலிருந்து வழுவி தெய்வத்தன்மை குறைவுபட்ட சமண சமயத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் போய்ச் சேர்ந்துகொண்டு, அம்மத நூல்கள் யாவற்றையும் நன்கு ஆராய்ந்து, அச் சமணர்களுக்குத் தலைமை வகித்து தருமசேனர் என்னும் பட்டப் பெயரையும் பெற்று, தம் மதந்தை அசட்டை செய்திருப்பதைப் பார்த்தபோது, திலகவதியார் பெரிதும் வருந்தினர். அநேக தலைமுறைகளாகத் தம்பெரியோரால் மேற்கொண்டொழுகி வந்ததும் பல அறப்பொருள்கள் நிரம்பப் பெற்றதும், ஆன்மா நடைதடுதேறுவதற்குக் காரணமானதும், இம்மை, மறுமைப் பயன்களை யளிக்கக் கூடியதுமான தம் சமயமாகிய சைவசமயத்தை விட்டு, வேறு சமயத்திற்குச் சென்ற தம்பியை எங்ஙனமேனும் தம சமயத்திற்குத் திருப்ப வேண்டுமெனப் பெரிதும் முயற்சித்தார். இவர் முயற்சி எவ்வகையில் நிகழ்நததென்பதை நாம்

சிறிது ஊன்றி நோக்குதல் வேண்டும். அதாவது தாம் தமக்கையாராகவும், திருநாவுக்கரசு சுவாமிகள் தம்பியாராகவுமிருப்பினும், அவரைக் கோபித்துத் தம் வயப்படுத்தினரா, அன்றி மற்றவர்களைக்கொண்டு அவருக்குப் புத்தி புகட்டினரா? அங்ஙனம் மனிதர்களால் ஆகும் காரியங்கள் ஒன்றுமே செய்திலர். ஏனெனில் மனித முயற்சியைக் காட்டிலும் தெய்வ முயற்சியே சிறந்ததெனவும், மன வுறுதியுடன் நினைத்து வரும் குற்றமற்ற விடயங்கள் சில நாட்களில் அன்றிச் சில வருடங்களில் எங்ஙனமேனும் நிறைவேறும் எனவும் அவர் நன்கு உணர்ந்திருந்தனராதலின், அம்மையார் தம் தம்பியை சைவ சமயத்தில் மீட்டும் சேர்ப்பிக்க வேண்டுமெனத் தம் வழிபடு கடவுளை நாடோறும் துதித்து வந்தனர். இதைச சேக்கிழார் பெருமான்,

" தூண்டுதவ விளக்கனையார்
சுடரொளியைத் தொழுதென்னை
யாண்டருளி நீராகி
லடியேன்பின் வந்தவனை
யீண்டுவினைப் பரசமயக்
குழிநின்று மெடுத்தாள
வேண்டுமெனப் பலமுறையும்
விண்ணப்பஞ் செய்தனரால் "

என மிகப் பொருத்தமாக எடுத்தோதுகின்றார். நிற்க,

•ஒரு நல்ல எண்ணத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டும், நினைத்துக்கொண்டு மிருப்போமாயின், அவ்வெண்ணமானது ஆகாய வெளியில் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்ற நல்லோர் பலருடைய நல்லெண்ணங்களுடன் கலந்து வன்மையடைந்து நமக்குப் பெரும்பயனைத் தாரா நிற்குமென அறிவு நூல்கள் கூறுகின்றன. அங்ஙனமே திலகவதியாரும் ஓயாமல் நினைத்துக் கொண்டிருந்த எண்ணம் கைகூடும் காலங் கிட்டியமையால், ஒருநாள் அம்மையாருக்குச் சொப்பனத்தில் தெரிவித்த படியே, திருநாவுக்கரசு சுவாமிகள் கொடுஞ் சூலைநோயினால் வருந்தத் தலைப்பட்டனர்.

சுவாமிகள் கொடுஞ் சூலை நோயினால் வருந்திய காலத்து, சமணர்கள் தங்கள் மதக் கோட்பாட்டின்படி பல மந்திரங்களைக் கூறியும், பல சிகிச்சைகளைச் செய்தும் நோய் தீராமைக்குக் காரணம் என்னையோவெனின், முன்னர் கூறியவாறு, அவர்கள் தங்கள் தலைவர்களால் உபதேசிக்கப்பட்ட அறக்கொள்கைகள் பலவற்றையும் கைவிட்டு மனஞ்சென்றவாறு நடந்து, தெய்வத் தன்மையையிழந்திருந்தனராதலாலும், சிவபிரான் திலக வதியாரின் வேண்டுகோளை முடிக்க எண்ணியிருந்தமையினாலுமே சமணர்கள் செய்த முயற்சி ஒன்றுமே பயன் பட்டிலது.

அம்மையார், தம் தம்பி மிக்க துன்பத்திலிருக்கின்றார் எனக் கேட்டும், சிறிதுங் கருணையற்றாராய் " நன்றறியா ரமண்பாழி நண்ணுகிலேன் " எனக் கூறி யனுப்பியது தகுதியுடையதாகுமோ ? என்னும் ஆசங்கை நிகழலாம். அதைச் சிறிது ஆராய்வாம்.

அறிவிற் சிறந்தோர் தகுதியற்றவைகட்கெல்லாம் கருணை பாராட்டிப் பிறரைக் கெடுக்க முன் வர மாட்டார்கள். சிறிது கடினமாக விருந்தேனும் அவரை நன்மார்க்கத்திற்குக் கொண்டு வரவே முயற்சிப்பார்கள். ஆகவே அம்மையார் தாம் அங்கு சென்றால், ஒரு சமயம் தம் தம்பி இவண் வருவது கடினமாயிருக்குமென எண்ணியும், தம் கொள்கைக்கு மாறானவர்களைப் பல்வகையிலும் துன்புறுத்தும் இரக்கமில்லா சமணர்களிடையே தாம்

தனித்துச் சென்றால், அவர்கட்கிருக் கும் பொறாமையினால் தமக்கேதேனும் தீங்கிழைக்கக் கூடுமென நினைத்தும், தந் தம்பியை நல்வழிப்படுத்தற் பொருட்டு தெய்வ அருளினாலேயே அந் நோய் வந்திருப்பதினால் அது அவர்க்கு ஒரு கெடுதியும் செய்யாதெனக் கருதியுமே தாம் அவண் செல்லாமலிருந்தார். இன்னும் இவ் விஷயத்தை ஊன்றி நோக்குங்கால் இவர் மற்றைய சகோதரிகளைவிடத் தந் தம்பி மாட்டு மிக்க அன்புடையராய் இருந்தார் எனவே கூறவேண்டி யிருக்கின்றது. எங்ஙனமெனில் தம் அருமைத் தாய் தந்தையரும் கணவரும் இறந்துபட்ட போது தாம் உயிர் தாங்கி யிருந்ததும், அவர் சமண் மதத்திற்குச் சென்ற போதுகூட அவர் பிறவிப் பெரும் பயனை யடைவதற் கேதுவாக அவரைத் திருத்திப் பணி கொள்ள வேண்டுமென இடைவிடாது இறைவனை இறைஞ்சிக் கொண்டிருந்ததும், சமணர்கள் இருப்பிடத்திற்குத் தாஞ் சென்று அவர்களால் தாமும், தந் தம்பியும் துன்புறாமல், அவர் தம்மை நோக்கி வந்தபோது இறைவனருளால் அவர் நோயைப் போக்கியதுந் தந் தம்பியின் மாட்டுவைத்திருந்த கருணையேயன்றி வேறென்னை? இதைக் குறித்தே சேக்கிழார் பெருமான்,

> " தம்பியா ருளராக
> வேண்டுமென வைத்தயா
> வும்பருல கணையவுறு
> நிலைவிலக்க வுயிர்தாங்கி
> யம்பொன்மணி நூல்தாங்கா
> தனைத்துயிர்க்கு மருள்தாங்கி
> யிம்பர்மனைத் தவம்புரிந்து
> திலகவதி யாரிருந்தார் "

எனக் கூறியுள்ளார். தம் தம்பியர் தம்மை நோக்கி வந்தவுடன் திலகவதியார்,

> மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு,
> சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு,
> பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு,
> வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பதுநீறு,
> பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு,
> ஏலவுடம் பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு,

எனத் திருஞான சம்பந்தமூர்த்திகள் கூறிய பெருமை வாய்ந்த திருநீற்றை மிக்க அன்புடனும், உண்மை நம்பிக்கையுடனும் எடுத்துப் பஞ்சாக்கரத்தை யோதி அவருக்கிட்டனர். உடனே சூரியனைக் கண்ட இருள்போலவும், தீப்பொறிப் பட்ட பஞ்சுப் பொதி போலவும் மிகக் கொடுமையுடன் அவரை வருத்தி வந்த சூலை நோய் இருந்த இடந் தெரியாமல் பறந்தோடிற்று. இதனால் அம்மையார் தெய்வத் தன்மையின் சிறப்பு எத்துணைத்தென்பது நன்கு விளங்குகின்றதல்லவா? இத் துணை வன்மை அம்மையாருக்குண்டானதின் காரணம் அவருடைய சிறந்த பக்தியே யாகும்.

இன்னும் இவர் கல்வி கற்றிருந்தனரா? இல்லையா? என்பதைக் குறித்துச் சிறிது ஆராய்வாம்.

காரைக்காலம்மையாரைப் போன்று இவர் பாடிய பாடல்கள் ஒன்றும் இல்லாமையால் இவர் இளமைதொட்டே கல்வி கற்று வந்தனரோ? இல்லையோ? என்னும் சந்தேகம் சிலருக்கு உண்டாகலாம். ஆனால் ஒருவர் பாடல்கள் பாடினால்தான் கல்வி கற்றவர்களாவர், இன்றேல் கல்வி கற்றவர்களாகார்எனத் தீர்மானிப்பது யாங்ஙனம்? சிலர் தாங்கள் கற்ற கல்வியைக் கொண்டு அறிவு நூல்களைப் படிப்பதிலும், இறைவனது திறத்தைக் கூறியுள்ள பாடல்

களைப்பாடுவதிலும், பக்தியுடன் இறைவனைத் தரிசிக்கும் போது பெருகிய ஆநந்தத்தினால் மனம் பொங்கி வருகின்ற பாடல்களை அப்போதைக்கப் போது பாடி இறைவனைத் துதிப்பதிலும் தங்கள் காலத்தைக் கழிக்கலாம். கடவுளால் தரப்பட்ட இயற்கை யழகுகளைக் கண்ட ஒரு புலவன், வரிவடிவாகிய பாடல்களைச் செய்யாவிடினும், அவன் மனதில் எப்படி அத்தோற்ற அழகுகளின் படமாகிய பாடல்பதிந்து கிடக்கின்றதோ, அதைப் போன்றே கல்வி கற்றோர் சிலர் பாடல்களைச் செய்யாவிடினும், அவைகள் அவர்கள் மனதில் பதிந்து கிடக்குமாதலால், அவர்களைக் கல்லாதவர்கள் என எங்ஙனம் கூறக்கூடும்? ஆகையினால் மேற்கூறிய பல அறிவான செய்கைகளை மேற்கொண்டொழுகிய திலகவதியார் கல்லாதவரெனக் கூறுவதற்கும் இடந்தந்திலது.

இன்னும் கல்வி யென்பது புத்தக மெடுத்துப் படிப்பது மாத்திரமன்று. கல்வியென்பது கற்றல் எனவும், அஞ்ஞானத்தைக் கல்வி எடுப்பதெனவும் பொருள்படும். இவ்வுலகத்தில் மனிதன் கற்கவேண்டியது புத்தகக் கல்வி மாத்திரமன்று, இதைவிட அஞ்ஞானத்தைப் போக்குகின்ற சிறந்த விடயங்கள் பலவற்றையும் அவன் கற்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக ஒருவர்,

“ உலகத்தோ டொட்ட வொழுகல் பல கற்றும்
கல்லா ரறி விலாதார் ”

என்றவாறு பல நூல்களைக் கற்றிருந்தும் உலகத்தாரோடு பொருந்தி வாழ அறியாரேல் அவர் கற்றவராகமாட்டாரென நீதி நூல்கள் கூறுகின்றன. ஆகவே கல்வி என்பது கற்கவேண்டிய விடயங்கள் பலவற்றிற்கும் பொருளாகுமே தவிர புத்தகக் கல்வி ஒன்றிற்குமாத்திரம் பொருளாகாது. அதன்றியும் புத்தகக் கல்வியைக் கற்றும் உலக நடையை யறிந்து நடவாமலும், தாங்கள் இவ்வுலகில் மனிதராகப் பிறந்ததற்குத் தக்க நன்மையைச் செய்யாமலும், தங்கள் ஆன்மா மேனோக்கிச் செல்லுவதற்கேற்ற வழிகளைத் தேடாமலும் இருப்பரேல் யாது பயன்? ஒருவர் புத்தகக் கல்வியைக்கல்லாமலே மேற்கூறிய விடயங்களிலெல்லாம் சிறப்புற்றிருப்பரேல் அவரைக் கல்லாதவரென எங்ஙனம் கூறுவது?

இன்னும் பல நூல்களைப் படித்தும் இறைவன் இலக்கணங்களை யுணர்ந்து அவனைத்தொழும் அறிவை அடையாவிட்டால் படித்தும் பயனின்று எனக் கல்வியின் பயனை நம் தெய்வப்புலவர்,

“கற்றத னாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின் ”

என்னும் குறட்பாவினால் விளக்குகின்றார். தாயுமானவரும் புத்தகக் கல்வியைக் கற்றும் தக்க அறிவில்லாமலிருப்பதைவிட, கல்லாமலிருப்பதே நன்மை என்பதற்கு,

“ கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றுமறி வில்லாத வென்
கர்மத்தை என் சொல்கேன் ”

எனக் கூறுகின்றார்.

இம்முறைகளினாலெல்லாம் எத்தகையோர் கற்றோர், எத்தகையோர் கல்லாதவர் என்பது நன்கு விளங்கும்.

ஆகவே திலகவதியார் மக்களறிய வேண்டிய சிறந்த பொருள்களை நன்குணர்ந்து அதன்படி நின்றொழுகி,

“ உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண் ”

என்றவாறு மானிட சரீரத்தைத்

தாங்கி வந்ததின் பயனை யடைந்துள்ளாராதலால் இவர் புத்தகக் கல்வியைக் கற்றனரா? இல்லையா? என்னும் தன்மை நமக்குப் புலப்படாவிடினும், இவர் கற்கவேண்டிய உயர்ந்த கல்வியைக் கற்றிருந்தன ரெனவே கூறுதல்வேண்டும்.

நம் தமிழ் நாட்டுப் பெண்மணிகள் யாவரும் கற்கவேண்டிய உயர்தரக் கல்வியைக் கற்று பலவற்றிலும் மிகச் சிறப்படைந்திருந்ததை உணர்ந்திருந்தும், தற்காலத்தில் நம் சிறுமிகள் கல்வி கற்பதற்குப் பல வசதிகள் ஏற்பட்டிருந்தும், நாம் அவர்களில்பலரைப் படிக்க வையாமலும், அங்ஙனமின்றி படிப்பித்தாலும் தக்க கல்வி வருவதற்கு முன்னரே பாடசாலையிலிருந்து நிறுத்தியும் வீடுகளில் படிப்பதற்கேற்ற முயற்சிகள் யாதொன்றும் செய்யாமலு மிருக்கின்றோம். ஒரோ ஒருவர்க்குக் கல்வி இல்லாமலே சில அறிவமைதிகள் அமையினும், யாவருக்கும் அங்ஙனமே அமையுமென்று கருதல்கூடா. இங்ஙனம் அமைவது அருமையேயாகும். ஆதலால் சிறுமிகள் அறிவில் சிறந்து விளங்கி நம் தேசத்திற்குச் சிறப்பை யுண்டாக்க வேண்டுமென்று விரும்புவோமாயின் அவர்களைக் கட்டாயமாக இளமையில் நன்கு கற்கும்படி செய்யவேண்டும்.

நம்மனோர்களில் பெரும்பான்மையோர் பொருள் சேகரிப்பதற்கே கல்வி கற்பது என நினைப்பதினால் தான் ஆண்மக்கட்கு மாத்திரம் கல்வி கற்பித்து, பெண்மக்களை விட்டுவிடுகின்றனர். அந்தோ! இவ்வெண்ணம் எப்போதுதான் நம்மனோர்கள் மனதை விட்டகலுமோ அறியோம். நம் பெண் மக்களை அழிந்து போகக்கூடிய பொன் வைரம் முதலிய அணிகலன்களினால் அலங்கரித்துப் பார்க்க வேண்டுமென்று நினைக்கும்பெற்றோர்கள், அழியாத கல்வி கேள்விகளாகிய அணிகலன்களினால் அலங்கரிப்பரேல், இதனால் அவர்கள் ஆன்மா ஒளிவிட்டு துலங்குவது மாத்திரமேயன்றி, இது என்றாவது தம்மைவிட்டு நீங்கி நமக்கு வறுமை வந்து விடுமோ என்ற அச்சமின்றி அவர்கள் எப்போதும் மிகக் களிப்புடன் காலங்கடத்தி, இம்மை மறுமைப் பயனை யடைவார்களல்லவா? ஆனால் சிறுமிகட்கு நம் தேசபக்தியையும், உண்மை மதக் கோட்பாடுகளையும் அமைதியையும் பெருந்தன்மையான அறிவையும் கொடுக்கக் கூடிய கல்வியே தற்காலத்தில் இன்றியமையாததாகும். வெறும் ஆடம்பரமான கல்வி பயனின்று, ஒரு தந்தை தன் மகளுக்குப் பொருள் நிறைய வைப்பதைவிடச் சிறந்த அறிவை யூட்டக் கூடிய கல்வியைக் கொடுப்பரேல், அது அவளுக்கு எத்துணைத் துன்பம் வந்த காலத்தும், மனச்சாந்தியைத் தந்து அறிவு நூல்களைப்படித்து அதிலுள்ள நுட்பப் பொருள்களைக் காணுந்தொறும் காணுந்தொறுஞ் சொல்லொணா ஆனந்தத்தை அளித்து, தன் வாழ்க்கையை மிக்க பயனுடன் கழிக்கும்படி செய்யும்.

இன்னும் இவ்வறிவின் முதிர்ச்சியினால் அவர்கள் ஆன்மா படிப்படியாய் உயர்ந்து பிறவிப்பயனை யடையவும் செய்கிறது. இத்துணைச்சிறந்தகல்வியே பெற்றோர்கள் தம்மக்கட்கும் கொடுக்க வேண்டிய நிதியாகும். இதை விரிக்கில் அளவிற்கு மிஞ்சிப் பெருகுமென அஞ்சிவிடுத்தாம்.

சமாஜ அறிக்கைகள்

(1) நம் சமாஜத்திய இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவிழா நடத்துவதைப் பற்றிய காலம், இடம், தலைவர், நடைமுறை முதலிய விவரங்களை முடிவு செய்வதற்காக சமாஜத்தின் பொதுக்கூட்டம் ஒன்று சென்னை கோவிந்தப்ப நாய்க்கன் தெரு 150-வது எண்ணுள்ள இல்லத்தில் 1930ஆு நவம்பர்மீ 15வ சனிக்கிழமை மாலை 6 மணிக்குக் கூடும். அது போழ்து பொதுக்கூட்டம் நடைபெறுதற்குத் தேவையான அங்கத்தவர் நிறைவெண் கிடைக்காவிடில் (Quorum) ஷை விஷயங்களைத் தீர்மானிப்பதற்கே ஷை இடத்திலேயே 1930ஆு நவம்பர்மீ 17வ திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சமாஜ விதிகளின்படி வருவோரைக் கொண்டு அக்கூட்டம் நடைபெறும்.

(2) ஷை விழா நடத்துவதைப் பற்றிய காலம், இடம், தலைவர், நடைமுறை முதலிய விவரங்களை எழுத்துமூலம் அறிவிக்க விரும்புவோர் காரியதரிசிக்கு 10-11-1930-க்குள் தபால்மூலம் அறிவிக்க வேண்டும்.

(3) ஷை நிறைவிழாவில் தீர்மானங்கள் கொண்டுவர விரும்பும் சமாஜ அங்கத்தினர், சமாஜ உறுதிமொழியில் கையெழுத்திட்டு தாங்கள் விரும்பும் தீர்மானங்களையும் தெளிவாகத் தமிழில் எழுதி 30-11-1930-ச்குள் காரியதரிசிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

(4) ஷை நிறைவிழாவில் சொற்பொழிவுகள் நிகழ்த்த விரும்பும் பெரியார்கள் தங்கள் தபால் விலாசங்களைத் தெளிவாக எழுதித் தங்கள் சொற்பொழிவுகளின் பொருள்களையும் தாங்கள் தங்கள் சொந்தச் செலவில் வருதல் கூடுமா, அன்றிப் பிரயாணச் செலவு பெற விருப்பமா என்பதையும் 30-11-1930-க்குள் காரியதரிசிக்குத் தெரிவிக்க வேண்டும்.

(5) ஷை விஷயங்கள் பற்றிக் கடிதம் எழுதுவோர் உடனே காரியதரிசியிடமிருந்து பதில் பெற விரும்பின், அதற்குரிய தபாற் செலவையும் அனுப்பிவைக்க வேண்டும்.

புத்தக வரவு :—சிதம்பரம் ஸ்ரீ ஜோதி ஆச்ரமத்தின் 5-வது வெளியீடாகிய "ஸ்ரீ தத்துவராய சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்" என்ற நூல் வரப்பெற்றோம். கந்தர் சஷ்டியன்று "கந்தர் சஷ்டி கவசம்" என்ற நூல் பெங்களூர் அலசூர், பழைய மதராஸ் ரோட், 39-வது இல்லத்தில் வதியும் திரு. கொ. பாலசுந்தர முதலியாரவர்களால் இலவசமாக வழங்கப்பட்டது. வேண்டுவோர் அன்னாருக் கெழுதுக.

ம தி ப் பு ரை

இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்:— ஆசிரியர்: T. S. பாலசுந்தரம் பிள்ளை (இளவழகனார்.) பக்கம் 96 - விலை அணா 9. இந்நூல் பிறமொழிக் கலப்பில்லாத தூய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இராமலிங்க அடிகளைப்பற்றி எத்துணை மிகுதியாக நூல்கள் வரையப்படினும் அவை யனைத்தையும் தமிழ்நாடு வரவேற்கும். பத்தொன்பதாவது நூற்றாண்டில் அடிகளைப்போல் சிறந்த தமிழ்ஞானி வேறெவருந்தோன்றிலர். அடிகள் வாழ்க்கை வரலாற்றினை இந்நூல் செம்மையாகக் கூறுவதோடு திருவருட்பாவின் சிறந்த கருத்துக்களையும் நல்ல ஆராய்ச்சி முறையில் விளக்குகிறது. உயர்தரக் கல்லூரிகளில் பாட புத்தகமாக இந்நூல் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்படுமென்று எதிர் பார்க்கிறோம். வேண்டுவோர், மறைமலையடிகள் கல்விக் கழகம், புதுப்பேட்டைத் தெரு, பாங்கிமலை என்ற ஆசிரியர் விலாசத்துக் கெழுதுக.

ப ரி சு!   ப ரி சு!!   ப ரி சு!!!

1. இன்று முதல் 1930ஆு டிசம்பர்மீ 10வ-க்குள் நமது சமாஜத்துக்கு ஓர் ஆயுள் அங்கத்தினரைச் சேர்த்து, அவர் செலுத்தவேண்டிய ஆயுள் சந்தா ரூபாய் இருபத்தைந்தையும் உடனே மணியாடர்செய்து உபகரிக்கும் அன்பருக்கு நமது சமாஜம் வெளியிட்ட சுந்தரர் தேவாரப் பிரதிகள் பத்து இனாமாக அளிக்கப்படும்.

2. ஷை தேதிக்குள் நமது சமாஜத்துக்கு பத்து சாதாரண அங்கத்தினரைச் சேர்த்து அவர்கள் செலுத்த வேண்டிய சந்தாத் தொகை ரூபாய் பதினைந்தையும் உடனே மணியார்டர்செய்து உபகரிக்கும் அன்பருக்கு நமது சமாஜத்திய சுந்தரர் தேவாரப் பிரதிகள் ஐந்து இனாமாக அளிக்கப்படும்.

3. ஷை தேதிச்குள் அவ்வாறே ஐந்து அங்கத்தினரைச் சேர்த்து அவர்கள் சந்தாத் தொகை ரூபாய் எழரையை உடனே மணியார்டர் செய்விக்கும் அன்பருக்கு ஷை சுந்தரர் தேவாரப் பிரதி ஒன்று இனாமாக அளிக்கப்படும்.

இங்ஙனம் :

சென்னை,
10—11—1930.

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

Registered No. M. 2330.

'SIDDHANTHAM"
Vol. 3—No. 11.

நம் சமாஜத் தொண்டு

தஞ்சை தாலூக்காவிலுள்ள சித்தாயல் என்னும் சிற்றூரில் நிகழும் பிரமோதூத ஆண்டு ஐப்பசித் திங்கள் ௫-ம் ஆம் நாள் (21-10-30) தீபாவளியன்று மாலை 3-மணிக்கு அவ்வூர் பள்ளிக்கூடத்தில் நம் சமாஜ உறுப்பினர் திருவாளர் தி. பொ. இராமையாச் சேதிராயர் அவர்கள் முயற்சியாலும், அவ்வூர்த்தலைவர் (கிராமமுனிசீப்) திருவாளர் சுந்தராராஜ நாட்டார் உதவியாலும் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் நம் சமாஜத் தொண்டரும், பல்லாவரம் பொதுநிலைக் கழகமாணவருமான திருவாளர் மறை. திருநாவுக்கரசர் அவர்கள் "அப்பூதி அடிகள் நாயனுர் புராண" சொற்பொழி வாற்றினுர்கள். சொற்பொழிவுக் கிடையிலே சைவசமயத்தின் மேன்மை, தற்கால நிலை, சைவர் கடமை, திருநீற்றின் உண்மை, சைவ உணவின் சிறப்பு முதலியன விளக்கப்பட்டன.

திருச்சி சைவசித்தாந்த சபை

இச்சபையின் ஆதாவில் நிகழும் பிரமோதூத ஆண்டு ஐப்பசித் திங்கள் முதல் நாள் (17-10-30) வெள்ளிக்கிழமை மாலை கூட்டமொன்று கூடியது. அக்கூட்டத்தில் நம் சமாஜத் தொண்டர் மறை. திருநாவுக்கரசு "திருவாசகத்திலொருவாசகம்" என்ற பொருள் பற்றி ஒரு மணி நேரம் அரிய சொற்பொழிவாற்றிப் பின் நம் சமாஜத் தொண்டுகளையும் அதனைச் சைவமக்கள் பெரிதும் போற்ற வேண்டுமென்றும், சித்தாந்தம் இதழை ஒவ்வொருவரும் வாங்க வேண்டுமென்றும், அடுத்த திங்களில் சைவசித்தாந்த மகாசமாஜத்தைத் திருச்சியிலுள்ளார் சிறப்பாக நடத்த வேண்டுமென்றும் வற்புறுத்திப்பேசினுர்.

அதன் பின் திருவாளர் பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் திரு. மறை. திருநாவுக்கரசுவின் சொற்பொழிவிலுள்ள நலங்களைப் பாராட்டிப் பேசினுர்கள். உடனே, திரு. கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளையால் சொற்பொழிவாளர்க்குச் சபையின் சார்பாகப் பூமாலை சூட்டப்பட்டது.

இறுதியில் மேற்படி சபை அமைச்சரால் சொற்பொழிவாளர்க்கும் வந்திருந்தவர்க்கும் வந்தனங்கூறக் கூட்டங் கலைவுற்றது.

நம் சமாஜத்தைத் தோற்றியவர்கள்—ஒரு திருத்தம்

[உயர்திரு மறைமலையடிகள் கீழ்வரும் திருத்தத்தை நமக்கு அனுப்பியுள்ளார்கள். அதை மிக மகிழ்ச்சியோடு வெளியிடுகிறேம்.—பத்திராசிரியர்.]

"சித்தாந்தம்" மலர் மூன்றின் ௭-ஆம் இதழிலும் ௰-ஆம் இதழிலும் சைவசித்தாந்த மகாசமாஜம் நிறுவியவர்களைக் குறிப்பிட்டதில் என்னுடன் திரு. நல்லசாமிப் பிள்ளையையுஞ் சேர்த்தெழுதி யிருக்கின்றீர்கள். மறைத்திரு ஞானியார் அடிகள் திருமுன் யான் "திருச்சிற்றம்பல விளக்கம்" என்னும் ஒரு விரிவுரை நிகழ்த்தி அதன் ஈற்றில்யான் "சைவ சித்தாந்த மகா சமாஜம்" நிறுவிய காலையில் என்னேடு உடனிருந்து அதற்கு உதவி செய்தவரும், அம்மகா சமாஜத்திற்குச் சில திங்கள் வரை என்னுடன் சேர்ந்து காரியதரிசி வேலை பார்த்தவரும், இன்ஜினிரிங் டிபார்ட் மெண்டில் சூபர்வைசராயிருந்தவரும், எம்மாசிரியர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்களின் மாணுக்கருள் ஒருவருமான திருவாளர் கு. சிங்காரவேல் முதலியாரவர்களே யாவர். திரு. நல்லசாமிப் பிள்ளையவர்கள் யாம் சமாஜம் நிறுவிய காலையில் எம்மோடு உடனிருந்தவரல்லர். பிறகு சமாஜவிழா நடந்த காலங்களில் விரிவுரையாளராயும் அவைத் தலைவராயும் வந்து திரு. நல்லசாமிப் பிள்ளையவர்கள் உதவி செய்தாராயினும் சமாஜம் நிறுவிய காலையில் அவர் எம்முடனிருந்து உதவி செய்தவரல்லர். சமாஜத்தின் இவ்வுண்மை வரலாறு நம் சைவ அன்பர்கள் உணரல் வேண்டுமென்று இஃது எழுதினேம். ஆகையால் இக்குறிப்பை அன்பு கூர்ந்து "சித்தாந்த"த்தில் வெளியிடுவீயுங்கள். எமது ஞானசாகரத்திலும் இக்குறிப்பு வெளிவரும். நலன்.

அன்புள்ள,

மறைமலையடிகள்.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.